'நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்' (யோசு 24:15)

# நற்செய்திப் பணியாளர்

(சிவகங்கை மறைமாவட்ட தன்னார்வ நற்செய்திப் பணியாளர்களின் மாதச் செய்தி மடல்)

அருள் :XV ஜூலை கி.பி. 2024 சான்று : 175



## மன்னிப்பே கனிவாழ்வு

# வட்டாரக் கூட்டங்கள்


அரிமளம்


மகிண்டி மிக்கேல்பட்டணம்


இராம்நகர்



தங்கச்சிமடம்


செஞ்சை


சி.கே மங்கலம்


சாலிகிராமம்


செக்காலை


முத்துப்பேட்டை


பரமக்குடி


சிவகங்கை



காளையார்கோவில்

**பாசத்திற்குரிய நற்செய்திப் பணிக்குடும்பமே,**

இயேசு கிறிஸ்து இறைமகனாய் இருந்தும் துன்பங்கள் வழியே கீழ்ப்படிதலை கற்றுக் கொண்டார்(எபி 5:8) என்ற இறை வார்த்தையின் ஆசி என்னிலும் உங்களிலும் நிலைத்திருக்க செபிக்கிறேன், வாழ்த்துகிறேன்.

இந்த இதழ் மூலம் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். கோடை விடுமுறைக்கு எங்கள் இல்லத்திற்கு எங்கள் மகள் குடும்பம் வந்திருந்தார்கள். என் பேரன் மதிய உணவு நேரத்தில் சாப்பிட அமராமல் அங்கும் இங்கும் ஓடிக்கொண்டும் விளையாடிக்கொண்டும் அடம் பிடித்துக் கொண்டும் இருந்தான். எனக்கு கோபம் வந்து "இப்போது சாப்பிட உட்காருகிறாயா? இல்லையா ?" என்று அதட்டினேன். உடனே அவன் "தாத்தா உங்களுக்கு பொறுமையை கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன்" என்றான். அவன் நான்காம் வகுப்பு முடித்திருக்கிறான். அந்த வார்த்தைகள் என்னை அதிகமாக சிந்திக்க வைத்தது. இந்நிகழ்வு என்னுள் பல்வேறு பரிமாணங்களில் பயணிக்க வைத்தது. உறவுகள் மூலம் நாம் கற்றுக் கொள்வது குறைந்தபட்சம் தான். நம்மில் கனி வாழ்வு மலர யாரெல்லாம் உதவுகிறார்களோ அவர்களுக்காக நாம் கடவுளுக்கு நன்றி செலுத்த வேண்டும். நாம் விண்ணக பேரின்ப நிலை வாழ்விற்குள் நுழைய ஒரு முக்கியமான அடையாள அட்டையுடன் கண்டிப்பாகச் செல்ல வேண்டும். அங்கு செல்பவர்களுக்கு அந்த அடையாள அட்டையில் ஒரே எண்தான் பொறிக்கப்பட்டிருக்கும். அந்த எண்: கலா 5:22,23. அதிலே ஒரு QR code இருக்கும். அதை ஸ்கேன் செய்து பார்த்தால் அதில் "அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம்" என்று இருக்கும். இந்த கனி வாழ்வு இல்லாதவர்கள் விண்ணகம் நுழைய முடியாது. இதை நமக்கு பயிற்றுவிப்பவர்கள் பெரும்பாலும் நம் உறவுகளை விட நம்மை பகைவர்களாக கருதி செயல்படுபவர்களே. இயேசு கிறிஸ்து ஆண்டவர் "பகைவரிடம் அன்பு. துன்புறுத்துவோருக்காக இறைவேண்டல்" (மத் 5:44) என்று கூறியிருப்பது எனக்கு முன்பு தெளிவாக புரியவில்லை. நமக்கு அது நல்லது. நாம் நல்ல உடல், உள்ள, ஆன்ம நலத்தோடு இருப்பதற்கு அதுதான் வழி என்றெல்லாம் புரிந்தது. ஆனால் விண்ணகம் செல்வதற்கு இதுதான் ஒரே வழி என்று வேறொரு கண்ணோட்டத்தில் கடவுள் புரிய வைத்திருக்கிறார்.

பகைவரிடம் அன்பு, வெறுப்போருக்கு நன்மை, சபிப்போர்க்கு ஆசி, இகழ்ந்து பேசுபவர்களுக்காக இறைவேண்டல் (லூக் 6:27,28) போன்ற ஆழமான கருத்துக்களை, இயேசு ஆண்டவரின் கனிவுமிக்க ஆலோசனைகளை வேறொரு கோணத்தில் சிந்தித்தால் எவ்வளவு பெரிய இறை உண்மைகளை அதில் வைத்திருக்கிறார் என்பது புரியும். "சின்ன சின்ன சிந்தனைகள்" என்ற புத்தகத்தில் படித்தது என்னை மிகவும் கவர்ந்தது. பகைவரும் ஆன்மீக வளர்ச்சியும் என்ற கட்டுரையில் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது. புத்த சமயம் "நம் பகைவர்களே நமது மிகச்சிறந்த ஆன்மீக நண்பர்கள்" என்று கூறுகிறது. பகைவர் என்பது நமக்கு அடிப்படையில் துன்பத்தை தருகிறவர்கள். நம் வாழ்வை நாசமாக்க முயல்கிறவர்கள். அவர்கள் எப்படி நமது நண்பர்களாக இருக்க முடியும்?. அங்கு அக்கட்டுரையின் ஆசிரியர் எழுதுகிறார் கேட்பதற்கு ஆச்சரியமாக இருந்தாலும் கொஞ்சம் ஆழமாக சிந்தித்தால் இதில் உள்ள உண்மை புலப்படும் என்று எழுதுகிறார். துன்பங்கள் மிகச்சிறந்த ஆசிரியர்கள். அவை கற்றுத்தரும் பாடத்தை போல வேறு எதுவும், யாரும் கற்றுத் தர முடியாது. நமக்கு வருகிற தாங்க முடியாத துன்பம் காரணமாக நமது சொந்த முயற்சியால் தீர்க்க இயலாத நிலையில் நாம் கடவுளை நோக்கி திரும்புகிறோம். நாம் கடவுள் பக்கம் திரும்ப அடிப்படை காரணம் பகைவர் நமக்குத் தரும் துன்பங்களே. நம்மிடம் கனி வாழ்வு மலர்ந்து வளர பெரிதும் உதவுவது நமக்கு தீமை செய்வதாக நினைத்துக்கொண்டு நன்மை செய்யும் நபர்களே என்று கூறினால் அது மிகையாகாது. மேலும் அந்த கட்டுரையில் "துன்பங்கள் நம்மை கடவுளிடம் விரட்டுகின்றன. கடவுள் துன்பத்தை விரட்டுகின்றார்" என்கிறார் மெலாங்தன்

என்பவர். கடவுள் பக்கம் நம்மை இட்டுச் செல்லும், விண்ணக வாழ்வை பெற்றுத்தரும், கனி வாழ்வை நம்மில் உருவாக்குகிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் நம் ஆன்மீக நண்பர்களே. ஒரு நற்செய்திக் கூட்டத்தில் நான் கேட்ட வினா ஒன்று. "நம் ஆவிக்குரிய வாழ்வுக்கு அதிகம் உதவுபவர்கள் யார்?" என்று கேட்டேன் பலரும் பல பதில்களை கூறி விளக்கம் அளித்தனர். யாருமே நம் பகைவர்களே என்று கூறவில்லை. திரு விவிலியத்தை ஆழமாக வாசிக்கும் போது, தியானிக்கும் போது பகைவர்கள் தான் நம் உண்மையான ஆன்மீக நண்பர்கள் என்ற வெளிச்சம் கிடைத்தது. குறிப்பாக திருத்தூதர் பணியிலே கிறிஸ்தவர்களுக்கு தீமை செய்வதாக நினைத்து செய்த எல்லா காரியங்களும் நன்மையாக முடிந்தன. ஸ்தேவான் கல்லெறியப்பட்டு கொலை செய்யப்பட்டபோது சிதறி ஓடிய மக்கள் நற்செய்தி அறிவித்தார்கள்.

கனி வாழ்வு நம்மில் உருவாக காரணமாய் இருப்பவர்கள் பெரும்பாலும் நம் பகைவர்களே. இந்த ஆழமான இறைஉண்மையை புரிந்து கொள்வோம். நம் பகைவர்களை நேசிப்போம். அவர்களுக்கு ஆசி கூறுவோம். அவர்களுக்காக இறைவேண்டல் செய்வோம். அவர்களுக்காக கடவுளுக்கு நன்றி செலுத்துவோம். இரண்டாம் உலகப்போர் சமயத்தில் ஹிட்லர், யூதர்களை சித்திரவதை முகாம்களில் (Concentration camps) அடைத்து வைத்துக் கடுமையான கொடுமைகளுக்கு அவரை ஆளாக்கினார். இத்தகைய சித்திரவதை முகாம்களில் ஒன்று ராவன்ஸ் ப்ரூக் என்ற இடத்தில் இருந்தது. 1939 ஆம் ஆண்டு பெண்களுக்கென்று கட்டப்பட்ட இந்த சித்திரவதை முகாமில் ஏறத்தாழ 90,000 பெண்களும் குழந்தைகளும் கொல்லப்பட்டதாக சொல்லப்படுகிறது.

இந்த சித்திரவதை முகாமில் வாழ்ந்து மடிந்த ஒருவரின் உடையில் ஒரு காகிதம் கண்டெடுக்கப்பட்டது. அந்த காகிதத்தில் கீழ்க்கண்ட இறை வேண்டல் எழுதப்பட்டிருந்தது: "இறைவா! நல்ல எண்ணம் கொண்ட மனிதர்களை மட்டுமல்ல தீய எண்ணம் கொண்ட மனிதர்களை கூட நீர் நினைவுகூர்ந்தருளும். இந்த தீய எண்ணம் கொண்ட மனிதர்கள் எங்களுக்கு இழைக்கும் கொடுமைகளை நீர் நினைவு கூற வேண்டாம். இதற்கு மாறாக அவர்கள் எங்களுக்கு இழைக்கும் கொடுமையின் காரணமாக எங்களுக்குள் பிறப்பெடுக்கும் நல்ல பண்புகளின் பின்னணியில் நீர் அவர்களை நினைவு கூறும். அவர்கள் எங்களுக்கு இழைத்த துன்பத்தின் காரணமாக நாங்கள் எங்களுக்கிடையேயான உறவில் வளர்ந்திருக்கிறோம். ஒருவர் மற்றவருக்கிடையேயான பிரமாணிக்கத்தில் வளர்ந்திருக்கின்றோம். தாழ்ச்சியில் வளர்ந்திருக்கின்றோம். உள்ள உறுதியில் வளர்ந்திருக்கின்றோம். தாராள மனப்பான்மையில் வளர்ந்திருக்கின்றோம். மற்றவர்களது துன்பத்தை உணர்கின்ற பரந்த மனப்பான்மையில் வளர்ந்திருக்கின்றோம். நீர் எங்களுக்கு கொடுமை இழைத்தவர்களை அவர்களது காரியங்களின் பின்னணியில் பார்த்து அவர்களுக்கு தண்டனை வழங்காமல், அவர்கள் எங்களில் மலரச் செய்த மேற்கண்ட நல்ல பண்புகளை கண்ணோக்கி அவர்களை மன்னிப்பீராக. (நன்றி:விண்ணக அமுது) என்று அதில் எழுதப்பட்டிருந்தது. நம்மில் கனி வாழ்வு வளர ஒருவேளை நம் வீட்டில் உள்ள கணவரோ, மனைவியோ, நம் பிள்ளைகளோ, உறவினர்களோ, பக்கத்து வீட்டுக்காரர்களோ, எதிர்த்த வீட்டுக்காரர்களோ, பணி புரியும் இடத்தில் இருப்பவர்களோ காரணமாக இருக்கலாம். அவர்களுக்காக செபிக்க கடமைப்பட்டிருக்கிறோம். அவர்களுக்காக நன்றி செலுத்துவோம். நம்மில் கனி வாழ்வு உருவாகி, வளர, முதிர்ச்சி பெற யார் யாரெல்லாம் உதவுகிறார்களோ அவர்களுக்காக கடவுளுக்கு நன்றி செலுத்துவோம். அவர்களுக்காக செபிப்போம். நம் பணி குழுவால் திட்டமிடப்பட்டிருக்கிற வட்டார தியான கூட்டங்கள், ஆண்டு தியானங்கள் அனைத்திலும் விடுதல் இன்றி, தவிர்ப்பின்றி அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று பாசத்தோடு கேட்டுக்கொள்கிறேன்.

உறவிலும் பணியிலும் உங்களோடு பயணிக்கும்

உங்கள் சகோதரர்

நற்பணி **அ. சகாயராஜா**

புதிய பணியாளர்கள் பயிற்சி பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் 02.06.2024 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 6 பேரும் இரண்டாம் குழுவில் 6 பேரும் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி M. மரிய கிரகோரி, நற்பணி A. யூஜின் அமல்ராஜ் நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி K. ஜஸ்டீன் கபிரியேல் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

புதிய பணியாளர்கள் பயிற்சி காளையார்கோவில், தந்தை ஜோசப் சேவியர் அரங்கில் 02.06.2024 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 10 பேரும் இரண்டாம் குழுவில் 9 பேரும் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி G.M.S ராணி, நற்பணி V. செங்கோல் மேரி, நற்பணி M. லூயிஸ்ஜான்போஸ்கோ நற்பணி A.பிரான்சிஸ் சேவியர், நற்பணி P. சகாயராணி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

புதிய பணியாளர்கள் பயிற்சி ஓரியூர் புனித அருளானந்தர் திருத்தலத்தில் 02.06.2024 அன்று நடைபெற்றது. 4 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி AR. சூசைராஜ், நற்பணி P. அருள் வளன், நற்பணி இரா. அருள்பிரகாசம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

அறிமுக பணியாளர்கள் பயிற்சி தங்கச்சிமடம், புனித குழந்தை தெரசாள் கோவிலில் 08.06.2024 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 16 பேரும் இரண்டாம் குழுவில் 5 பேரும் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி G.M.S ராணி, நற்பணி S. மோட்ச அலங்காரம், நற்பணி J. ரபேக்கா நற்பணி J. மேரிபுஷ்பம்,நற்பணி X. லூர்துமேரி நற்பணி K. பில்கேட்ஸ் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

புதிய பணியாளர்கள் பயிற்சி இராமநாதபுரம், புனித செபமாலை அன்னை ஆலயத்தில் 09.06.2024 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 7 பேரும் இரண்டாம் குழுவில் 6 பேரும் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி A. சகாயராஜா, நற்பணி J. மேரிபுஷ்பம் , நற்பணி G ஜெனிபர், நற்பணி பெ. தெரசா மிரண்டா, நற்பணி S. வில்லியம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

புதிய பணியாளர்கள் பயிற்சி அமைதியகம், காயாவயலில் 09.06.2024 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 9 பேரும் இரண்டாம் குழுவில் 8 பேரும் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை, நற்பணி S. சகாயராணி, நற்பணி J. அருள் இளங்கோ, நற்பணி P.அமலோற்பவ ஆரோக்கியராணி, Sr. பச்சைஜோதி, நற்பணி S. பால்ராஜ் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

புதிய பணியாளர்கள் பயிற்சி சிவகங்கை, வியான்னி அருள்பணிமையத்தில் 09.06.2024 அன்று நடைபெற்றது. 7 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை, நற்பணி A. பிரான்சிஸ் சேவியர், நற்பணி G மிக்கேல் பிரபாகர், நற்பணி M. லூயிஸ்ஜான்போஸ்கோ ஆகியோர் வழிநடத்தினார்கள்.

புதிய பணியாளர்கள் பயிற்சி குருமிளாங்குடி, புனித அன்னாள் ஆலயத்தில் 09.06.2024 அன்று நடைபெற்றது. 4 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி S. மோட்ச அலங்காரம், நற்பணி J.ஆரோக்கியசாமி, நற்பணி S. ஆரோக்கியசாமி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

புதிய பணியாளர்கள் பயிற்சி சாயல்குடி, புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் 16.06.2024 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 7 பேரும் இரண்டாம் குழுவில் 14 பேரும் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி J. மேரிபுஷ்பம் நற்பணி நற்பணி G. ஜெனிபர், நற்பணி A. சந்திரபுஷ்பா, நற்பணி M. அருள் மரிய நாயகம் நற்பணி T. ஸ்டீபன் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

புதிய பணியாளர்கள் பயிற்சி VII இராசசிங்கமங்கலம், தூய ஆவியார் ஆலயத்தில் 23.06.2024 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 7 பேரும் இரண்டாம் குழுவில் 13 பேரும் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி M. மரிய கிரகோரி, நற்பணி A. சத்தியேந்திரன், நற்பணி S. தைனஸ்மேரி, நற்பணி S. மோட்ச அலங்காரம், நற்பணி A.ஆரோக்கியமேரி, நற்பணி A. ஜான்சி மேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

புதிய பணியாளர்கள் பயிற்சி கமுதி, புனித அந்தோணியார் ஆலயத்தில் 23.06.2024 அன்று நடைபெற்றது. 4 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி G.M.S ராணி, நற்பணி M. அருள் மரியநாயகம், நற்பணி T. மிக்கேல் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

## கடந்த மாதச் செயல்பாடுகள்

- 05.6. 2024 அன்று காயாவயல் அமல அன்னை அமைதியகத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 33 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி விசுவாசம், நற்பணி தைனஸ்மேரி, நற்பணி அம்பிகா ஆகியோர் வழிநடத்தினர்கள்.
- 05.6. 2024 அன்று பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 68 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி S. இராஜேந்திரன், நற்பணி T. ஸ்டீபன், நற்பணி சிறிய புஷ்பம் ஆகியோர் வழிநடத்தினர்கள்.
- 07.6.2024 அன்று மகிண்டி மிக்கேல்பட்டிணம் புனித மிக்கேல் அதிதூதர் கோவிலில் முழுஇரவு செப வழிபாடு நடைபெற்றது. நற்பணி S இராஜேந்திரன், நற்பணி S. மோட்ச அலங்காரம், நற்பணி சகாயமேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.
- 08.6.2024 அன்று இடைக்காட்டூர் இயேசுவின் திரு இருதய ஆலயத்தில் பரிந்துரை செபம் நடைபெற்றது. இதில் சாலைகிராம வட்டாரத்தை சார்ந்த நற்பணி ஜோன்ஸ் மேரி, நற்பணி பாத்திமா மேரி, நற்பணி ஜெபா ஆகியோர் பங்கேற்று செபித்தார்கள்.
- 16.6. 2024 அன்று சாயல்குடி பங்கு கீழமுந்தல் கிராமத்தில் தொடர் களப்பணி நடைபெற்றது. இதில் நற்பணி ததேயுஸ் கிளாரே, நற்பணி ஆரோக்கிய ராஜா ஆகியோர் பணியாற்றனர்.
- 23.6. 2024 அன்று அஞ்சுக்கோட்டை பங்கு சின்ன அஞ்சுக்கோட்டைகிராமத்தில் தொடர் களப்பணி நடைபெற்றது. இதில் நற்பணி சகாய தமிழ் செல்வி, நற்பணி பவுலின் ஆகியோர் பணியாற்றனர்
- 23.6. 2024 அன்று இருதயபுரம் பங்கு பெரியார் நகர் கிராமத்தில் தொடர் களப்பணி நடைபெற்றது. இதில் நற்பணி S இராஜேந்திரன், நற்பணி S. ஆரோக்கியசாமி நற்பணி S. மோட்ச அலங்காரம், நற்பணி சகாயமேரி ஆகியோர் பணியாற்றனர்



## வட்டாரக் தியானக் கூட்டங்கள்

**சாலைகிராமம் வட்டாரம்**

சாலைகிராமம் வட்டாரக் கூட்டம் 02.06.2024 அன்று காலை 10.30 மணிக்கு சாலைகிராமம் புனித சகாய அன்னை கோவிலில் நடைபெற்றது. தொடர்பாளராக நற்பணி M. சேவியர் அவர்கள் கலந்துகொண்டு நற்செய்திப் பணியாளராகிய நாம் உயிர்ப்பின் மக்களாக பயணிக்கிறோமா? என்ற தலைப்பில் செய்தி வழங்கினார். அதையொட்டி குழுப்பகிர்வு நடைபெற்றது. மாலை 4 மணிக்கு நன்றி செபத்தோடு கொள்கைப்பாடலுடன் தியானம் நிறைவுற்றது.

நற்பணி. **ஜோன்ஸ்மேரி,** வட்டார கண்காணிப்பாளர்

**இராம்நகர் வட்டாரம்**

இராம்நகர் வட்டாரக் கூட்டம் 02.06.2024 அன்று கானாத்தான்காடு புனிதர்கள் பேதுரு பவுல் கோவிலில் காலை 10.30 மணிக்கு தொடங்கியது. தொடர்பாளராக செயலர் கலந்து கொண்டு நற்செய்திப் பணியாளராகிய நாம் உயிர்ப்பின் மக்களாக பயணிக்கிறோமா? என்னும் தலைப்பில் செய்தி வழங்கினார். மதிய உணவிற்குபின் குழுப்பகிர்வு நடைபெற்றது. மன்றாட்டு அறிவிப்பு மற்றம் கொள்கைப்பாடலுடன் மாலை 4.00 மணிக்கு தியானம் நிறைவுற்றது. 30 பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

நற்பணி. **ஆரோக்கியசாமி,** வட்டார கண்காணிப்பாளர்

**காளையார்கோவில் வட்டாரம்**

காளையார்கோவில் வட்டாரத் தியானக் கூட்டம் 09.06.2024 ஞாயிறு அன்று காளையார்கோவில் புனித அருளானந்தர் கோவிலில் காலை 10.30 மணிக்கு வட்டாரப் பணியாளர்களின் தொடக்க வாழிபாட்டுடன் துவங்கியது. தொடர்பாளராக செயலர் கலந்து

கொண்டு நாம் உயிர்ப்பின் மக்களாக பயணிக்கிறோமா? என்ற மையச் சிந்தனையில் செய்தி வழங்கி நெறிப்படுத்தினார். மதிய உணவிற்குபின் குழுஅமர்வு மற்றும் கலந்துரையாடல் நடைபெற்றது. 19 பேர் கலந்து கொண்ட கூட்டம் கொள்ளைப்பாடலுடன் மாலை 4.00 மணிக்கு நிறைவுற்றது.

நற்பணி. **செங்கோல்மேரி,** வட்டார கண்காணிப்பாளர்

**பரமக்குடி வட்டாரம்**

பரமக்குடி வட்டாரத் தியானக் கூட்டம் 16.06.2024 ஞாயிறு அன்று சுப்ராயபுரம் சமூக அரங்கில் வட்டாரப் பணியாளர்களின் தொடக்க வாழிபாட்டுடன் துவங்கியது. 45 பேர் கலந்துகொண்ட தியானத்தை செயலர் தொடர்பாளராக கலந்து கொண்டு நாம் உயிர்ப்பின் மக்களாக பயணிக்கிறோமா? என்ற மையச் சிந்தனையில் செய்தி வழங்கி நெறிப்படுத்தினார். மதிய உணவிற்குபின் குழுஅமர்வு நடைபெற்றது. அறிவிப்புகள், பரிந்துரை செபம் மற்றம் கொள்ளைப்பாடலுடன் மாலை 4.00 மணிக்கு நிறைவுற்றது.

நற்பணி. **ஜஸ்டின் கபிரியேல்,** வட்டார கண்காணிப்பாளர்

**சிவகங்கை வட்டாரம்**

சிவகங்கை வட்டார நற்செய்திப் பணியாளர்களின் வட்டார தியானக் கூட்டம் 23- 6 -2024 ஞாயிறு காலை 10:30 மணி அளவில்.சிவகங்கை நற்பணி சுவாமிநாதன், நற்பணி லூர்து மேரி இவர்களது இல்லத்தில் நடைபெற்றது. நற்பணி ஷீலா, நற்பணி ரோணிக்கம்மாள், நற்பணி ஜெயசீலன் ஆகியோர் தொடக்க வழிபாட்டை நடத்தினார்கள். 'உயிர்ப்பு காட்டும் வழியில் நான் நடக்கின்றேனா?' என்ற தலைப்பில் அருள்சகோதரி ஜோஸ்பின் பச்சை ஜோதி அவர்கள் தொடர்பாளராக கலந்து கொண்டுசிறப்பான செய்தி வழங்கினார்கள். அதன்பின் கடந்த வட்டார தியானக் கூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டது. மதிய உணவிற்குப்பின் குழு கலந்தாய்வு நடைபெற்றது. அறிவிப்பு மற்றும் மன்றாட்டு ஏறெடுக்கப்பட்டது. கொள்கை பாடலுடன் கூட்டம் மாலை 4 மணிக்கு நிறைவுற்றது. 25 பேர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நற்பணி. **எல். ஜோசப் இருதயம்,** வட்டார கண்காணிப்பாளர்.

**இராமநாதபுரம் வட்டாரம்**

23.06.2024 ஞாயிறு காலை 10.30 மணிக்கு கீழக்கரை நற்பணி அனுசியா அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. இறைப்பிரச்சன்ன செபத்தை நற்பணி ஜெயந்தி அவர்களும் இறைபுகழை நற்பணி ஞான செல்வியும் பாவமன்னிப்பு வழிபாட்டை மேரி புஷ்பம் அவர்களும் நடத்தினார். நற்பணி விசுவாசம் அவர்கள் தொடர்பாளராக கலந்து கொண்டு உயிர்ப்பு காட்டும் வழியில் நான் நடக்கின்றேனா? என்ற தலைப்பில் செய்தி வழங்கினார்கள். அறிவிப்பு மற்றும் மன்றாட்டு ஏறெடுக்கப் பட்டது. கொள்கை பாடலுடன் கூட்டம் 4.00 மணிக்கு நிறைவுற்றது. 26 பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

நற்பணி. **தனிநாயகம் ,** வட்டார கண்காணிப்பாளர்

**முத்துப்பேட்டை வட்டாரம்**

முத்துப்பேட்டை வட்டாரக் கூட்டம் 23.06.2024 ஞாயிறு அன்று புனித காணிக்கை அன்னை கோவிலில் காலை 10.30 மணிக்கு வட்டாரப் பணியாளர்கள் தொடக்க வழிபாட்டுடன் ஆரம்பமானது. 19 பேர் கலந்துகொண்ட இத்தியானத்தை செயலர் தொடர்பாளராக கலந்து கொண்டு நாம் உயிர்ப்பின் மக்களாக பயணிக்கிறோமா? என்ற மையச் சிந்தனையில் செய்தி வழங்கி நெறிப்படுத்தினார். நண்பகல் உணவிற்குபின் குழுப்பகிர்வு நடைபெற்றது. மாலை 4.00 மணிக்கு அறிவிப்புகள் மற்றும் கொள்கைப்பாடலுடன் தியானம் நிறைவுற்றது.

நற்பணி. **ததேயு கிளாடிஸ்,** வட்டார கண்காணிப்பாளர்

**மகிண்டிமிக்கேல்பட்டணம் வட்டாரம்**

மகிண்டிமிக்கேல் பட்டணம் வட்டாரத் தியானக் கூட்டம் 09.06.2024 அன்று திருவரங்கம் நற்பணி மோட்சமேரி இல்லத்தில் காலை 10.00 மணியளவில் வட்டாரப் பணியாளர்களின் தொடக்க செபத்துடன் ஆரம்பமானது. தொடர்பாளராக நற்பணி M.மரியகிரகோரி கலந்து கொண்டு நற்செய்திப் பணியாளர்களாகிய நாம் உயிர்ப்பின் மக்களாக பயணிக்கிறோமா? என்ற தலைப்பில் செய்தி வழங்கினார். நண்பகல் உணவிற்குபின் குழுவாக அமர்ந்த இரண்டு வினாக்கள் அடிப்படையில் பகிர்வு தியானம் நடைபெற்றது. 17 பணியாளர்கள் கலந்து கொண்டனர். அறிவிப்புக்குப்பின் நன்றி செபம் சொல்ல மற்றும் கொள்கைப்பாடலுடன் மாலை 4.00 மணிக்கு கூட்டம் நிறைவுற்றது.

நற்பணி. **அடைக்கலம்,** வட்டார கண்காணிப்பாளர்

# ஆடுகளுக்கு வாயில் நானே

கடவுளை அறியஏவதன் வாயிலாக உங்களுக்கு அருளும் நலமும் பெருகுக. (2 பேது 1:2)

கடவுளை ஒருவரும் கண்டதில்லை காணவும் முடியாது என்று திருவிவிலியத்தில் கூறப்பட்டிருந்தாலும் (1 திமொ 6:16). கடவுளை மனிதர் அறியக்கூடும். அறிந்து கொள்ள வேண்டியது மனிதருடைய தலையாயக் கடமையாக இருக்கிறது. கடவுளை அறிவது என்பது ஒன்று அவரை அறிந்திருப்பது என்பது வேறொன்று. பலர் நூல்களிலோ விவிலியத்திலோ படித்தும் பல செயல்களை அறிந்தும் இருக்கலாம். ஆனால் கடவுளை அறியாதிருக்கலாம். சிறுவன் சாமுவேல் ஆலயப் பணிகளைச் செய்து கொண்டு ஏலி என்ற ஆலய குருவின் பராமரிப்பில் இருந்தார். ஆனால் இன்னும் கடவுளை அறியாதிருந்தார் (1 சாமு 3:7). இன்றைக்கும் ஆலயப் பணிகளை முழு ஈடுபாட்டோடு செய்பவர்களாய் இருக்கலாம். ஆனால் கடவுளை அறியாதிருக்கலாம். ஒரு முறை நம் ஆண்டவரை இரவு நேரத்தில் சந்திக்க வந்த நிக்கோதேமுவிடம் மறுபடியும் பிறந்தாலன்றி எவரும் இறையாட்சியில் போதகராய் இருந்தும் உமக்கு இது தெரியவில்லையே என்று ஆதங்கப்பட்டார் (யோவா 3:10). ஒவ்வொரு நாளும் ஆண்டவர் பாதத்தில் அமர்ந்து அவர் தரும் ஆலோசனைக்கு கீழ்படிந்து நடக்கும் போது அவரை நாம் அறிந்து கொள்ளலாம். மேலும் மனிதர்கள் தம் அறிவினாலும் முயற்சிகளினாலும் கடவுளை அறிந்து கொள்ள இயலாது. கடவுள் தாமாகவே அவரை நமக்கு வெளிப்படுத்துவதால் மட்டுமே அவரை நாம் அறிந்து கொள்ள இயலும்; ஏனென்றால் கடவுள் முடிவில்லாதவர் நாமோ காலப் பிறவிகள், அழிவுக்குரியவர்கள். அவர் தூயவர், நாம் பாவிகள்; அவர் எல்லையற்ற ஞானமுடையவர்; நாமோ அறிவிலிகள்; அவருக்கும் நமக்கும் உள்ள பிளவு அளவிட முடியாதது. எனவேதான் புனித பவுல் அறிவுக்கு எட்டாத இந்த அன்பை அறிந்துகொள்ளும் ஆற்றல் பெறுவீர்களாக என்று குறிப்பிடுகிறார். (எபே 3:19) அப்படியானால் கடவுள் தம்மை மனிதருக்கு வெளிப்படுத்தியருக்கிறாரா? இக்கேள்விக்கு பல முறை பல வகைகளில் முற்காலத்தில் இறைவாக்கினர் வழியாக நம்மூதாதையரிடம் பேசிய கடவுள் இவ்விறுதி நாள்களில் தம் மகன் வழியாக நம்மிடம் பேசியுள்ளார் (எபி 1:2) என்று கூறப்பட்டுள்ளது. கடவுளை யாரும் என்றுமே கண்டதில்லை. தந்தையின் நெஞ்சத்திற்கு நெருக்கமானவரும் கடவுள் தன்மை கொண்டவருமான ஒரே மகனே அவரை வெளிப்படுத்தினார் (யோவா 1:18). நம் ஆண்டவரும் என்னை காண்பது தந்தையைக் காண்பது ஆகும் என்றார் (யோவா 14:9). கிறிஸ்தவ வாழ்க்கையில் உண்மையான ஒரே கடவுளாகிய உம்மையும் நீர் அனுப்பிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நிலைவாழ்வு என்று அவரே கூறியுள்ளார் (யோவா 17:3). தந்தையைத் தவிர வேறு எவரும் மகனை அறியார். மகனும் அவர் யாருக்கு வெளிப்படுத்த வேண்டுமென்று விரும்புகிறாரோ அவருமன்றி வேறு எவரும் தந்தையை அறியார் என்றும் கூறியுள்ளார் (மத் 11:27). கடவுளை அறிவதற்கு மற்ற முயற்சிகளை எடுப்பதைவிட விவிலியத்தை தூய ஆவியானவரின் துணையுடன் நன்கு ஆய்ந்து படிப்பது அதிலும் நான்கு நற்செய்தி நூல்களை அதிகம் படிப்பது மிகுந்த பலன் தரும். மறைநூல் அறிஞர்களைப் பார்த்து மறைநூல் வழியாக நிலைவாழ்வு கிடைக்கும் என எண்ணி அதனைத் துருவித் துருவி ஆய்ந்து பார்க்கிறீர்கள் அம்மறைநூலும் எனக்கு சான்று பகிர்கிறது என்றார் (யோவா 5:39).

ஒருவர் மனம் மாறி இயேசு ஆண்டவரை தன் வாழ்வின் மீட்பராக ஏற்றுக்கொள்ளும்போது கடவுளை அறியும் அறிவை பெற தூய ஆவியானவரை அவர் கொடையாகப் பெறுகிறார். இதைப் பவுல் குறிப்பிடுகையில் நாம் இவ்வுலக மனப்பாங்கைப் பெற்றுக் கொள்ளவில்லை. மாறாக தூய ஆவியானவரை கடவுளிடமிருந்து பெற்றுள்ளோம். இவ்வாறு கடவுள் நமக்கு அருளிய கொடைகளைக்

கண்டுணர்ந்து கொள்கிறோம் என்கிறார். (1 கொ 2:12)) கடவுளுடைய ஞானத்தால் அவரை அறிந்து கொள்ள முடியும். ஆனால் உலகினர் தம் ஞானத்தால் கடவுளை அறிந்து கொள்ளவில்லை (1 கொ 1:21) மனம் மாறி அவரை ஏற்றுக்கொள்பவர்களுக்கு கிறிஸ்து கடவுளின் வல்லமையும் ஞானமுமாய் இருக்கிறார் (1 கொ 1:24).

இறைமகன் வந்து உண்மையான இறைவனை அறிந்து கொள்ளும் ஆற்றலை நமக்குகு தந்துள்ளார் என்று கூறப்பட்டுள்ளது. கடவுளை நாம் அறியும்போது அது நமக்குள் புதிய ஆற்றலைத் தருகிறது (1 யோவா 5:20). பழைய ஏற்பாட்டுக் காலத்தில் வாழ்ந்தவர்கள் கடவுளை அறிந்திருந்தார்கள். யோபு என் மீட்பர் வாழ்கிறார் என்றும் இறுதியில் மண்மேல் எழுவார் என்று நான் அறிவேன். நான் சதையோடு இருக்கும்போதே கடவுளைக் காண்பேன். நானே அவர் என் பக்கத்தில் நிற்கக் காண்பேன் என் கண்களே காணும் வேறு கண்கள் அல்ல. என் நெஞ்சம் அதற்காக ஏங்குகிறது என்கிறார் (யோபு 19:25-27) கடவுளை அறிவதன் பயன் என்ன? முதலாவது ஒருவர் தன்னை ஒரு பாவி என்று ஏற்றுக் கொள்கிறார். இந்த முதற்படியில் அடியெடுத்து வைக்காதவர் இன்னும் அவரை அறியவில்லை. இவ்வாறு அவரை அறிந்துகொள்ளும்போது நம்மை அவர் தெரிந்து கொண்ட நோக்கத்தை வெளிப்படுத்துகிறார். வாழ்க்கையில் மாற்றம் ஏற்படுகிறது. என் ஆடுகள் என்னை அறந்திருக்கின்றன. அவைகளுக்கு குறைவில்லை. நல்ல மேய்ச்சல் நிலத்தை கண்டுகொள்கிறது. அவைகளுக்கு ஆபத்து இல்லை (யோவா 10:9-10) (திபா 23) அவரை அறிந்து கொள்வதன்மூலம் இறைபற்றுடன் வாழ்க்கை நடத்துவதற்கு தேவையான எல்லாவற்றையும் அவர் தம் இறைவல்லமையால் நமக்கு அருளியுள்ளார் (2 பேது 1:3). ஆண்டவராகய இயேசு கிறிஸ்துவை அறியும்போது உலகின் அழிவு சக்திகளிலிருந்து தப்பித்துக் கொள்கிறோம் (2 பேது 2:20). ஏழை எளியோரின் வழக்கில் அவன் நீதி வழங்கினான் எல்லாம் நலமாய் இருந்தது. என்னை அறிதல் என்பது இதுதானே என்கிறார் ஆண்டவர் (எரே 22:16). பெருமை பாராட்ட விரும்புவர் நானே ஆண்டவர் என்பபதை அறிந்து புரிந்து கொள்வதிலும் பேரன்போடும் நீதியோடும் நேர்மையோடும் உலகில் நான் செயலாற்றுகிறேன் என்பதிலும் பெருமை பாராட்டுவாராக. ஏனெனில் இவற்றில் நான் மகிழ்ச்சியடைகிறேன் என்கிறார் (எரே 9:23-24). கடவுளை அறிவதன் வாயிலாக நமக்கு எத்தனை ஆசீர்வாதங்கள் காத்திருக்கின்றன. எனவேதான் புனித பவுல் திருச்சட்டத்தை கடைப்பிடிப்பதையே பெருமையாக எண்ணிக் கொண்டிருந்தவர், கடவுளை அறியும் அறிவைப் பெற்றுக் கொண்டதும் மற்ற அனைத்தையும் குப்பையாக எண்ணினார். அவரது ஏக்கமெல்லாம் கடவுளை அறிவதில் ஆர்வமாய் மாறியது. உண்மையில் என்னைப் பொறுத்தமட்டில் என் ஆண்டவராம் கிறிஸ்து இயேசுவைப் பற்றிய அறிவே நான் பெறும் ஒப்பற்ற செல்வம் என்று அறிக்கையிடுகிறார் (பிலி 3:8). மேலும் நான் யாரிடம் நம்பிக்கை கொண்டுள்ளேன் என அறிவேன். அவர் என்னிடம் ஒப்படைத்ததை இறுதிநாள் வரை காத்திட வல்லவர் என்கிற உறுதியான நம்பிக்கை எனக்கு உண்டு என்கிறார். (2 திமொ 1:12) நம் ஆண்டவர் அன்று எருசலேமைப் பார்த்து கடவுள் உன்னைத் தேடி வந்த காலத்தை நீ அறிந்து கொள்ளவில்லையே என்று கண்ணீர் வடித்தார். (லூக் 19:41-44) நாட்டில் குடியிருப்பவர்களோடு ஆண்டவருக்கு வழக்கு ஒன்று உண்டு. நாட்டில் உண்மையும் இல்லை இரக்கமும் இல்லை. கடவுளை அறியும் அறிவும் இல்லை என்கிறார் (ஒசே 4:1). உண்மையாகவே நான் விரும்புவது பலியை அல்ல எரிபலிகளைவிட கடவுளை அறியும் அறிவையே விரும்புகிறேன் என்கிறார் (ஒசே 6:6) எனவே புனித பவுலைப் போல கிறிஸ்து இயேசுவைப் பற்றிய அறிவில் நாளும் வளர ஆர்வம் கொள்வோம். கடவுளையும் நமது ஆண்டவராகிய இயேசுவையும் நாம் அறிவதன் வாயிலாக நமக்கு அருளும் நலமும் பெருகும் என்பதில் உறுதி கொள்வோம் (2 பேது 1:2).

நற்பணி M.**விசுவாசம்.** செஞ்சை.

# இது சாத்தியமா?

**காட்சி - 1** இடம் : கடைத் தெரு

பங்கேற்போர் : ஆனால், ஆனாலும்

**ஆனால் :** நீ மோசம்; நான் பாசம்

**ஆனாலும் :** இல்லை. நீ தான் மோசம்; நான் பாசம்.

**ஆனால் :** இல்லையில்லை ; நீதான் மோசம்

**ஆனாலும் :** இல்லவேயில்லை ; நீ தான் மோசம்

**ஆனால் :** கடவுளுக்கு என்னைத்தான் ரொம்ப பிடிக்கும்.

**ஆனாலும் :** வாய்ப்பே இல்லை ; கடவுளுக்கு உகந்த வாழ்க்கை வாழ்பவன் நானே என்னைத்தான் கடவுளுக்கு ரொம்ப பிடிக்கும்.

**ஆனால் :** சரி வா, நீதிமன்றத்துக்குப் போவோம்.

**காட்சி - 2** இடம் : நீதிமன்றம்

பங்கேற்பவர்: நீதிபதி ஆனால், ஆனாலும், நற்பணி நித்யன், நற்பணி சத்யன்.

**ஆனால் :** நான் ரொம்ப நல்லவன். இவன் தான் மோசம். இவன் தண்டனை பெற வேண்டும். கணம் நீதிபதி அவர்களே.

**ஆனாலும் :** நான் கடவுளுக்கு உகந்த வாழ்க்கை வாழ்பவன் கடவுள் விரும்பாத வாழ்க்கை இவன். இவன்தான் அழிவுக்குரியவன் கனம் நீதிபதி அவர்களே.

**நீதிபதி :** ஆனால், ஆனாலும்... உங்கள் இருவரின் வழக்கினை உற்றுநோக்கும்போது, நீதிபதியாக எனக்கே தலை சுற்றுகிறது. என்ன விசித்திரமான வழக்கு இது. உங்கள் இருவரில் கடவுளுக்கு ஏற்புடையவர் யார்? சரி, உங்கள் சார்பாக சாட்சியம் கூற வந்திருக்கும் இரண்டு நற்செய்திப் பணியாளர்களும் சாட்சிய கூண்டில் ஏறி நிற்கட்டும்.

(நற்பணி. நித்யன் ஒரு கூண்டிலும், நற்பணி.சத்யன் ஒரு கூண்டிலும் ஏறி நிற்கின்றனர்)

**நீதிபதி :** நற்பணி.நித்யன் அவர்களே, "ஆனால்" என்ற வார்த்தையை உங்கள் சொந்த வாக்கியங்களில் 2 முறை பயன்படுத்தவும்.

**நற்பணி நித்யன்** 1 : நான் புத்துயிர் செபங்களில் கலந்து கொள்ளத்தான் நினைக்கிறேன். ஆனால் அந்த நேரம் பார்த்து என் உறவினர்கள் என் வீட்டிற்கு வந்துவிடுவதால், புத்துயிர் செபத்தில் கலந்துகொள்ள முடியவில்லை.

2. முகூர்த்த நாள் பார்க்காமல்தான் என் வீட்டுத் திருமண நிகழ்வினை நடத்த விரும்புகிறேன். ஆனால் என் உறவினர்கள் என்னைக் கோபித்துக் கொள்வார்களே.

**நீதிபதி :** நற்பணி.சத்யன் அவர்களே "ஆனாலும்" என்ற வார்த்தையை உங்கள் சொந்த வாக்கியங்களில் 2 முறை பயன்படுத்துங்கள்.

**நற்பணி சத்யன் :** 1. நான் புத்துயிர் செபத்திற்குக் கிளம்பும்போது என் உறவினர்கள் என் வீட்டிற்கு வரத்தான் செய்கிறார்கள். ஆனாலும் அவர்களை ஆசுவாசப்படுத்தி என் நிலையைப் புரியவைத்துவிட்டு, நான் புத்துயிர் செபத்திற்கு வந்துவிடுகிறேன். புத்துயிர் செபம் முடிந்ததும், உபசரிப்பைத் தொடருவேன்.

2. முகூர்த்த நாள் பார்க்காமல் திருமண நிகழ்வுகளை நடத்தும்போது உறவினர்கள் என் மீது கோபிக்கிறார்கள். ஆனாலும் கடவுளுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து முகூர்த்த நாட்களில் நிகழ்வுகள் எதுவும் வைப்பதில்லை.

**நீதிபதி :** இது வரையிலும் சந்திக்காத வழக்கினை, இந்நீதிமன்றம் இன்றைக்கு விசித்திரமான வழக்கினைச் சந்தித்திருக்கிறது. சாட்சியங்களின் கூற்றுகளின் அடிப்படையில் "ஆனாலும்" மட்டுமே கடவுளுக்கு உகந்த வாழ்க்கை வாழ்வதால், இந்நீதிமன்றம் அவரைப் பாராட்டுகிறது.. "ஆனால்" சாக்குப்போக்கு சொல்லி அதன் வாழ்க்கையை கடவுளின் விருப்பத்திற்கு எதிராக அமைத்திருக்கிறது. ஆகவே, இந்நீதிமன்றம் "ஆனால்" அவர்களை வன்மையாகக் கண்டிக்கிறது. தன்னை மாற்றிக் கொள்ளாவிடில், கடுந்தண்டனைக்கு உட்பட நேரிடும் என்ற எச்சரிக்கையை விடுக்கிறது இந்நீதிமன்றம்.

**- நீதிமன்றம் கலைக -**

நம் வாழ்விலும், "ஆனால்"குறைக்கப்பட்டு, "ஆனாலும்" கூட்டப்படும்போது, ஆண்டவருக்கு உகந்த வாழ்வது வாழ்வது சாத்தியமே.

நற்பணி **அருள் இளங்கோ,** இராம்நகர்

## அணிந்து கொள்வோம் படைக்கலன்களை

"அமைதியை அருளும் நற்செய்தியை அறிவிப்பதற்கான ஆயத்த நிலையை உங்கள் காலில் மிதியடிகளாகப் போட்டுக் கொள்ளுங்கள்" (எபே6:25).

நற்செய்தி அறிவிப்பதற்கான ஆயத்த நிலையில் முதன்மையானதான அன்பு பற்றி தியானித்து வருகின்றோம். பிறருடைய ஆன்மா அழிந்து விடக்கூடாது என்கின்ற பிறர் அன்பினால் உருவாகுவது தான் நற்செய்திப்பணி. நற்செய்திப் பணியை சரியாகச் செய்வதற்கு, தன்னிலை அறிந்து, மனம் மாறி அதனால் தான் அனுபவிக்கும் மகிழ்ச்சியையும், மன அமைதியையும் பிறரும் அனுபவிக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் உருவாகும் நற்செய்திப் பணிதான் இறைவன் விரும்புகின்ற மாற்றத்தைக் கொண்டு வரும்.

பெரிய இறைவாக்கினர் ஏசாயா ஆண்டவரின் பிரசன்னத்தில் தன்னிலை உணர்ந்ததை நாம் வாசிக்கிறோம். "தூய்மையற்ற உதடுகளைக் கொண்ட மனிதன் நான்"(எசா6:6) என்று தன்னிலை உணர்ந்து வருந்தினார். இறைவனிடம் முறையிடுகின்றார். தன் பாவ நிலையை உணர்ந்த ஏசாயாவை "இந்நெருப்புப் பொறி உன் உதடுகளைத் தொட்டது உன் குற்றப்பழி உன்னை விட்டு அகன்றது. உன் பாவம் மன்னிக்கப்பட்டது"(எசா6:7) என்று ஆண்டவர் அவரது பாவங்களை மன்னித்தார். தாம் மன்னிப்பு பெற்றதும் ஏசாயா இறைவாக்குரைக்கிறார். இயேசுவின் பாடுகளைக் கூட முன்னறிவித்திருக்கிறார் (எசா53).

தன்னிலை உணர்ந்து வருந்தி இறைவனிடம் நம் பாவங்களை அறிக்கையிடும் போது ஆண்டவர் நம் பாவங்களை மன்னித்து நம்மை நற்செய்தி அறிவிப்பதற்குத் தகுதி உள்ளவர்களாக, தயார் நிலையில் இருக்கிறவர்களாக மாற்றுகிறார். அதன் பிறகு நாம் அறிவிக்கிற நற்செய்தி யாருக்கு அறிவிக்கப்படுகிறதோ அவர்களின் உள்ளத்தை ஊடுருவும். நம்மை சரிசெய்யாமல் நாம் அறிவிக்கிற நற்செய்தி யாரிடமும் எந்த

மாற்றத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை. இறை வார்த்தைகளைக் கடைபிடித்துக் கற்பிக்கிறவர் விண்ணரசில் மிகப்பெரியவராகக் கருதப்படுவதாக ஆண்டவர் இயேசு கூறியிருக்கிறார்(மத்5:19).

ஒருமுறை ராமகிருஷ்ண பரமஹம்சரிடம் ஒரு தாய் தன் மகனை அழைத்து வந்தார். குருவே இவன் இனிப்பு அதிகமாக உண்கின்றான். நீங்கள் சொன்னால் இனிப்பு அதிகம் உண்பதை நிறுத்தி விடுவான். எனவே, இனிப்பு அதிகம் உண்ண வேண்டாம் என்று இவனிடம் சொல்லுங்கள் என்றாள். அவரும் புன்னகைத்தவாறு அமைதியாய் இருந்து விட்டார். இதுபோன்று மூன்று முறை அழைத்து வந்த போதும் இவர் அமைதியாய் புன்னகைத்து அனுப்பி விடுவார். நான்காம் முறை வந்தபோது குழந்தாய்! இனிமேல் இனிப்பு அதிகம் உண்ணக்கூடாது என்று கூறினார்.

தாய்க்குக் கோபம் வந்துவிட்டது குருவே! இதை நீங்கள் இவனை முதல் முறை சந்திக்கும் போதே கூறியிருக்கலாமே என்றாள். அவர் புன்னகைத்தவாரே அம்மா அவனை நீங்கள் முதல் முறை என்னிடம் அழைத்து வந்தபோது நானும் அதிகமாக இனிப்பு உண்டு கொண்டு தான் இருந்தேன் இப்போதுதான் அதனை நிறுத்த முடிந்தது எனவே தான் இன்று கூறினேன் என்றாராம்.

அதுபோல நற்செய்தி அறிவிப்பதிலும் நாம் நம்மை தகுதிப்படுத்திக் கொள்வது மிகவும் முக்கியமானது. நம்மை தகுதிப்படுத்திவிட்டு நற்செய்தி அறிவிக்கும் போது உண்மையிலேயே ஒரு விடுதலையைத் தனி மனிதனுக்கோ குடும்பத்திற்கோ கொடுக்க முடியும். நம் நற்செய்திப் பனிக்குழுவிலும் இறை வார்த்தை ஒளியில் நாம் விடுதலை அடைந்து நாம் பெற்ற விடுதலையைப் பிறருக்கு வழங்க வேண்டும் என்பதையே நோக்கமாக வைத்திருக்கின்றோம்.

முதலில் உங்கள் கண்ணில் இருக்கும் மரக்கட்டையை எடுத்து எறியுங்கள், அதன் பின் உங்கள் சகோதரர் அல்லது சகோதரியின் கண்ணில் இருக்கும் துரும்பை எடுக்க உங்களுக்குத் தெளிவாய்க் கண் தெரியும் (லூக் 6:42) என்று இயேசு ஆண்டவரும் அறிவுறுத்துகின்றார்.

இரண்டாவதாக, இறைவனோடு நமக்கு உறவும் ஒன்றிப்பும் இருக்க வேண்டும். அப்போதுதான் நாம் உடல் சார்ந்தவற்றையும் உலகு சார்ந்தவற்றையும் நாட மாட்டோம். கடவுளுக்கு உகந்தவற்றை நாடித் தேடுவோம். அதனால் நம்மை புதுப்பித்துக் கொண்டே இருப்போம். "ஒருவர் கிறிஸ்துவோடு இணைந்திருக்கும் போது அவர் புதிதாகப் படைக்கப்பட்டவராய் இருக்கிறார் பழையன கழிந்து புதியன புகுந்தன அன்றோ!" (2கொரி5:7). ஆண்டவரோடு இணைந்து வாழும் போது தான் புதுப் படைப்பாக மாறுகின்றோம். நாம் அடைந்த புது பிறப்புக்குச் சான்று பகர்கின்றோம். இறைவனோடுள்ள உறவும் ஒன்றிப்பும் நம்மிடம் உள்ள பழைய இயல்புகளையெல்லாம் மாற்றுகின்றது. நமக்கு மகிழ்ச்சியையும் அமைதியான வாழ்வையும் தருகின்றது. பவுல் ஆண்டவரோடு இணைந்து வாழ்ந்ததால் மகிழ்ச்சியோடும் உள்ளத்தில் அமைதியோடும் வாழ்ந்தார். எனவே, நற்செய்தியை ஆற்றலோடும் வல்லமையோடும் அறிவித்தார் (2 கொரி 11:23-29). நற்செய்தி அறிவிப்பிற்கு இறை உறவும் ஒன்றிப்பும் மிக மிக அவசியமானது ஆகும்.

தன்னிலை அறிந்து புதுப்பிக்கப்பெற்று மாற்றமடைவதும் இறைவனோடு ஒன்றித்து வாழ்வதுமான ஆயத்த நிலையை மிதியடிகளாக அணிந்து கொண்டு தயார் நிலையில் இருப்போம்.

நற்பணி **ச.சகாயராணி,** இராம்நகர்.

## ஜூலை 2024 புதிய பணியாளர்கள் பயிற்சி – குழு 1

| நாள் | மையம் | வழிநடத்துபவர்கள் |
|---|---|---|
| 07.07.24 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | நற்பணி G.M.S. ராணி<br>நற்பணி S. இராஜேந்திரன் |
| 07.07.24 | தந்தை ஜோசப் சேவியர் அரங்கம்,காளையார்கோவில் | நற்பணி J. மேரி புஷ்பம்<br>நற்பணி A. ஆரோக்கியமேரி<br>நற்பணி V. செங்கோல்மேரி |
| 13.07.24 | புனித குழந்தை தெரசாள் கோவில், தங்கச்சிமடம் | நற்பணி J. மேரி புஷ்பம்<br>நற்பணி J. ரபேக்கா |
| 14.07.24 | புனித செபமாலை அன்னை கோவில், இரோமநாதபுரம் | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி S. ஆரோக்கியசாமி |
| 21.07.24 | அமலஅன்னை அமைதியகம் காயாவயல் | Sr. ஜோஸ்பின் பச்சைமேரி<br>நற்பணி J. அருள் இளங்கோ<br>நற்பணி P. அமலோற்பவ ஆரோக்கியராணி |
| 21.07.24 | புனித ஆரோக்கிய அன்னை கோவில், சாயல்குடி | நற்பணி M. மரியகிரகோரி<br>நற்பணி A. சந்திரபுஷ்பா |
| 28.07.24 | தூய ஆவியார் கோவில் இராசசிங்கமங்கலம் | நற்பணி M. மரியகிரகோரி<br>நற்பணி S. தைனஸ்மேரி |
| 28.07.24 | புனித அந்தோணியார் கோவில், கமுதி | நற்பணி G.M.S. ராணி<br>நற்பணி M. லூயிஸ் ஜான்போஸ்கோ<br>நற்பணி T. மைக்கேல் |

## 2024 ஆண்டுத் தியானம் – 2024

| | நாள் | இடம் | தியான வழிகாட்டி | நெறியாளர்கள் |
|---|---|---|---|---|
| 1. | 19,20 & 21 ஜூலை2024 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | Fr. குமார் ராஜா தூத்துக்குடி | நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல்<br>நற்பணி S. மோட்ச அலங்காரம் |
| 2. | 16,17 & 18 ஆக. 2024 | அமல அன்னை அமைதியகம், காயவயல் | Fr. குமார் ராஜா<br>Fr. குமார் ராஜா | நற்பணி S. ஆரோக்கியசாமி<br>நற்பணி I. செபஸ்தியான் |
| 3. | 23,24 & 25 ஆக. 2024 | அமல அன்னை அமைதியகம், காயவயல் | Fr. கிரேஸிஸ் மைக்கல் இறைஇரக்க தியான இல்லம்.மங்கலகிரி | நற்பணி L. ஆரோக்கியசாமி<br>நற்பணி S. செபாஸ்டின் தார்சிஸ் |
| 4. | 06,07 & 08 செப். 2024 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | Fr. மைக்கேல் மகிழன் எம்மாவூஸ் மையம் | நற்பணி M. சேவியர்<br>நற்பணி S. ஆரோக்கியசாமி |
| 5. | 13,14 & 15 செப். 2024 | அமல அன்னை அமைதியகம், காயவயல் | Fr. கிரேஸிஸ் மைக்கல் இறைஇரக்க தியான இல்லம்.மங்கலகிரி | நற்பணி J. ஆரோக்கியசாமி<br>நற்பணி A. சத்தியேந்திரன் |
| 6. | 18,19 & 20 அக். 2024 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | Fr. மைக்கேல் மகிழன் எம்மாவூஸ் மையம் | நற்பணி I. புஷ்பராஜ்<br>நற்பணி V. செங்கோல்மேரி |
| 7. | 08,09 & 10 நவ. 2024 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | Fr. கிரேஸிஸ் மைக்கல் இறைஇரக்க தியான இல்லம்.மங்கலகிரி | நற்பணி L. ஜோசப் இருதயம்<br>நற்பணி S. ரஜேந்திரன் |
| 8. | 13,14 & 15 அக். 2023 | அமல அன்னை அமைதியகம், காயவயல் | Fr. மைக்கேல் மகிழன் எம்மாவூஸ் மையம் | நற்பணி A. மெமீலா ஸ்டீபன்<br>நற்பணி S. தைனஸ்மேரி |

# கொடு (GIVE)

'கொடுப்பது' இறைவனின் பண்பு, ஒருவர் கொடுக்கிறவராக விளக்கும்போது அவர் இறைப் பண்பை உடையவராக இருக்கிறார். ஆகவே, முகமலர்ச்சியோடு கொடுக்க வேண்டும் (2 கொரி 9:7). கொடுக்கிற அளவைவிட கொடுக்கின்றவரின் இதயச் சிந்தை அதிக விருப்பம் உள்ளதாக இருக்கவேண்டும் (லூக் 21:1-4). ஏனெனில் கொடுத்தலில் இறைவன் பிரியப்படுகிறார் (2 கொரி 9:12,13). கொடுத்தல் இறை ஆசீர் பெறக் காரணமாக அமைகிறது (2 கொரி 9:10). உலகில் நமக்கென்று எதுவும் இல்லை. நம்முடையது என்று எதையும் உரிமை கொண்டாட முடியாது. நாம் வெறும் பொறுப்பாளர்கள். அனைத்திற்கும் உரிமையாளர் ஆண்டவர்தாம் என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். நாம் எப்படி கொடுக்கிறமோ, அதற்கு ஏற்றபடி இறைவன் கைம்மாறு அளிப்பார் (மத் 7:2) கொடுப்பது ஒரு வகையான சேமிப்பு. அது கொடுப்பவருக்கு ஏராளமான நன்மைகளைக் கொண்டு வரும் (2 கொரி 8:2).

> "முகமலர்ச்சியோடு கொடு".
> 2கொரி 9:7

i) **கொடுத்தல் ஒரு அருள்வரம் :** 'கொடுத்தல்' என்ற பண்பு இறைவன் கொடுக்கும் அருள் வரம். கொடுப்பதால் உண்டாகும் ஆசீர் பற்றி திருவிவிலியத்தில் ஏராளமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 'நீ பல இனத்தாருக்கும் கடன் கொடுப்பாய். நீயோ கடன் வாங்கமாட்டாய். உன் சகோதரன் ஒருவன் வறியவனாய் இருந்தால், உன் வறிய சகோதரன் மட்டில் உன் உள்ளத்தைக் கடினப்படுத்தாதே. உன் கையை மூடிக்கொள்ளாதே. மாறாக, அவனுக்கு உன் கரங்களைத் தாராளமாகத் திறந்து, அவன் தேவைக்கு ஏற்ப, எவ்வளவு தேவையானாலும், கடன் கொடு. அப்பொழுது நீ செய்யும் அனைத்துச் செயல்களிலும், மேற்கொள்ளும் எல்லா முயற்சிகளிலும் உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்கு ஆசி வழங்குவார்' (இச 15:6-10). எனவே, 'உங்களிடம் கேட்கும் எவருக்கும் கொடுங்கள். நீங்கள் உன்னதக் கடவுளின் மக்களாய் இருப்பீர்கள்' (லூக் 6:34-35)

ii) **கொடுத்துக் கொண்டே இரு :** கொடுப்பது இறைவனின் குணம். அதனால்தான், அவர் கொடுத்துக் கொண்டே இருக்கிறார். கடவுள் தாம் படைத்த அனைத்தையும் மனிதர் ஆளும்படி கொடுத்தார். நாம் வாழ்வதற்குத் தேவையான காற்று, மழை, வெளிச்சம் ஆகிய அனைத்தையும் அவர் நமக்கு இலவசமாகக் கொடுத்திருக்கிறார். தாம் கொடுப்பதை எப்போதும் அவர் நிறுத்துவதில்லை. மாறாக, தாம் கொடுப்பதை ஒரு நாள் மட்டும் ஏன் ஒரு மணி நேரம் மட்டும் கொடுக்காமல் நிறுத்துவாரென்றால் நாம் அனைவரும் அழிந்து போய்விடுவோம். இறைவன் எப்போதும் எல்லோருக்கும் தாராளமாய்க் கொடுப்பவர். மக்கள் பெருந்திரளாய் அவரிடம் வருவதைக் கண்டு அவர்கள் மேல் பரிவுகொண்ட இயேசு ஆண்டவர், ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொண்டு ஐயாயிரம் பேருக்கு நிறைவாய் உணவு கொடுத்தார் (யோவான் 6:1-15). அது மட்டுமல்ல அன்பை, அருளை, ஆறுதலை, ஆசீரை, சமாதானத்தை, மகிழ்ச்சியை என அனைத்தையும் கொடுத்தார். எல்லாவற்றிற்கும் மேலாக, மனிதகுல மீட்புக்காகத் தம் உயிரையும் கொடுத்தார்.

iii) **கொடுக்காததால் வரும் தண்டனை :** தன்னுடைய வீட்டு வாசல் அருகே கிடந்த ஏழை லாசருக்கு கொடுக்காத செல்வந்தன் பாதாளத்தில் வேதனை நிறைந்த தீப்பிழம்பில் தள்ளப்பட்டான் . இறுதித்தீர்ப்பு நாளில் மிகச் சிறியோர்களாகிய ஏழை எளியவர்களுக்குக் கொடுக்காத கூட்டத்தைப் பார்த்து. 'சபிக்கப்பட்டவர்களே என்னிடமிருந்து அகன்று போங்கள். அலகைக்கும் அதன் தூதருக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிற என்றும் அணையாத நெருப்புக்கள் செல்லுங்கள்' என்று சொல்லப்படும் (மத் 25:31-46). அனனியா சப்பிரா தம்பதியர் தங்கள் நிலத்தை விற்ற தொகை முழுவதையும் கொடுக்காமல் தூய ஆவயானவருக்கு எதிராகப் பாவம் செய்ததால் இருவரும் இறந்து போனார்கள் (திப 5:1-11). ஆகவே கேட்பவருக்குக் கொடுத்து முடிவில்லா தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்வோம்




iv) **கொடுப்பதால் உண்டாகும் நன்மை :** கொடுப்பது ஏராளமான நன்மையைக் கொண்டுவரும். நாம் எப்படிக் கொடுக்கின்றோமோ. அதற்கு ஏற்றபடி இறைவன் கைம்மாறு அளிப்பார் (மத் 7:2). கொடுக்காமல் எதையும் பெற்றுக்கொள்ள முடியாது. இழப்பதன் மூலமாகத்தான் பெற்றுக்கொள்ள முடியும். கொடுப்பதும் பெற்றுக் கொள்வதும், விதைப்பதும் அறுப்பதும் என்கிற விதிக்கு ஒப்பானதாகும். விதைக்கும்போது கொஞ்சமாக தானியத்தை விதைக்கிறோம். ஆனால், அறுவடை செய்யும்போது விதைத்ததைவிட பல மடங்கு பெருகச் செய்து இறைவன் கொடுக்கிறார். ஆனால், பலர் விதைக்காமல் அறுவடை செய்வதிலேயே ஆர்வமாய் இருக்கிறார்கள். 'குறைவாக விதைப்பவர் குறைவாக அறுவடை செய்வார். நிறைவாக விதைப்பவர் நிறைவாக அறுவடை செய்வார்' இதைத் தெரிந்து கொள்ளுங்கள். நீங்கள் எல்லா வகையிலும் செல்வர்களாகி வள்ளன்மை மிகுந்தவர்களாய் விளங்குவீர்கள் (2 கொரி 9:6-11) எனவே, 'பசித்திருப்போருக்காக உன்னையே கையளித்து வறியோரின் தேவையை நிறைவு செய்வாயானால் இருள் நடுவே உன் ஒளி உதிக்கும். இருண்ட உன் நிலை நண்பகல் போல் ஆகும். ஆண்டவர் தொடர்ந்து உன்னை வழிநடத்துவார். வறண்ட சூழலில் உனக்கு நிறைவளிப்பார். உன் எலும்புகளை வலிமையாக்குவார். நீயும் நீர் பாய்ந்த தோட்டம் போலும், ஒரு போதும் வற்றாத நீரூற்று போலும் இருப்பாய்' (எசா 58:10-11) என்கிறார் ஆண்டவர்.

இறைபுகழ் எப்படி இறை நெருக்கத்தை ஏற்படுத்துகிறதோ அதுபோல. கொடுக்கும் குணமும் இறை நெருக்கத்தை பெற்றுத் தருகிறது. இது இறை நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறது. மேலும், சமுதாயத்தின் பொருளாதாரப் பிரச்சனைகளுக்குத் தீர்வாக. ஒரு சமத்துவமான சமுதாயத்தை உருவாக்கி சகோதரத்துவத்திற்கு வழி வகுக்கிறது. கொடுங்கள். உங்களுக்குக் கொடுக்கப்படும். அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியில் போடுவார்கள். நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ. அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும் (லூக் 6:38). கேட்கிறவருக்கு முகமலர்ச்சியோடு கொடுப்போம். அதன் மூலம் இறைவனின் மேலான ஆசீரைப் பெற்றுக் கொள்வோம்.

நற்பணி **ஆரோக்கியசாமி.ஜே**

# சீடத்துவ மரபினர்
## (யூபிலி ஆண்டின் தயாரிப்பாக)

உரோமாபுரியின் ஒரு பங்குக்கு நம் திருத்தந்தை பிரான்சிஸ் போயிருந்த போது ஏடு கலந்துரையாடல் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அது சிறார்களின் கேள்வி நேரம்... சிறுவன் இம்மானுவேல் ஒலிவாங்கிக்கு அருகில் போய் நிறகிறான். கேட்க நினைப்பதைக் கேட்க முடியாமல் பெருமூச்சு விடுகிறான் கேட்க தயங்குகிறான். 'தயங்காமல் கேள்... கேள்...!' போப் உற்சாகப்படுத்துகிறார்.

'என்னால் முடியவில்லையே' முனகுகிறான். பிஞ்சுக் கரங்களால் முகத்தை மூடியபடி அழுதான் இம்மானுவேல். போப் பிரான்சிஸ் ஆதரவாய் தம் கரம் நீட்டி 'இங்கே வா இம்மானுவேல்! என் அருகே வா! காதருகே சொல்! ' என்கிறார். அருகே போய் நின்ற சிறுவனை பேரனை அணைத்துக் கொள்ளும் தாத்தாவைப்போல அணைத்துக் கொள்ள மெல்ல அவரின் காதில் தேம்பி தேம்பி அழுது கொண்டே சொல்ல ஆரம்பித்தான். உலகஞானத்தந்தையின் நெஞ்சோடு நெஞ்சாக ஒரு ஞானப்பேரன் உரையாடிய ஞானக்காட்சியை கூடியிருந்த திரு அவை உருகிப்போய் அனுபவித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறது!.

முழுக்கவனத்துடன் கேட்டுக் கொண்ட போப் அவனை அனுப்பி வைத்துவிட்டு அவன் அமர்ந்ததும் 'நாம் பேசியதைப் பொதுவில் சொல்லட்டுமா?' என்று கேட்க சம்மதிக்கிறான் சிறுவன். அவனது கேள்வி இதுதான். 'சில நாட்களுக்கு முன்பு என் தந்தை இறந்து விட்டார். அவர் கடவுள் நம்பிக்கையற்றவர். ஆனால், தனது 4 குழந்தைகளுக்கும் திருமுழுக்கு தந்துள்ளார். என் அப்பா ஒரு நல்லவர். அவர் இப்போது மோட்சத்தில் இருப்பாரா?' கேள்வியைச் சொல்லிவிட்டு தொடர்கிறார் திருத்தந்தை. கூட்டத்தைப் பார்த்து, 'தனது அப்பாவை நல்லவர் என்று ஒரு மகன் சொல்வது எத்துணை நன்று. இது போன்ற மனிதரை கடவுள் தன்னிடமிருந்து தூக்கி எறிந்து விடுவாரோ 'என்று கேட்க கூட்டம் அமைதி காத்தது.

'சொல்லுங்கள்' என்று உற்சாகமூட்ட ஒருமிக்க 'மாட்டார்... மாட்டார்' என்று கூற சிறுவன் பக்கம் திரும்பி 'இங்கே பார் இம்மானுவேல், இது தான் பதில் ! கடவுள் நிச்சயமாக உன் அப்பாவைக் குறித்து பெருமைப்படுவார். ஏனென்றால் தனது குழந்தைகளைக் கடவுள்நம்பிக்கையற்றவர்களாக ஆக்கிவிடாமல், திருமுழுக்கு தந்திருக்கிறார் உனது பொறுப்பான அப்பா. அவர்... நிச்சயமாக கடவுள் நம்பிக்கை கொண்டவராய் தான் இருந்திருக்கிறார். கடவுளுக்கு அவரை நிச்சயம் அதிகம் பிடித்திருக்கும் ' என்று கூறி முடித்த நம் திருத்தந்தை அவனது தைரியத்தையும் பாராட்டினார். (நன்றி. நெறி காட்டும் ஆளுமைகள்)

அப்பாவின் மீதுள்ள அன்பின் தாக்கம் மனதின் ஏக்கமாக, வெதும்பி அழும் கண்ணீராக ஊற்றெடுக்கும் என்றால் அது ஒரு இறைதாகமுள்ள பிள்ளையாகத்தான் இருக்க முடியும். தகப்பனுக்காக, அவரின் ஆன்ம அமைதிக்காக குமுறும் மனது பிற்காலத்தில் சீடத்துவத்தில் மடை மாற்றம் பெறும் என்பது நிச்சயமே. நம் நற்செய்திப் பகுதிகளில் உவமைகளிலும், நிகழ்வுகளிலும் வரும் பிள்ளைகள் சீடத்துவப்பிள்ளைகளாக மாறினார்களா? அது அவர்களை மாற்றியது? சம காலத்தில் நற்செய்திப் பணியாளர்களின் குடும்பத்திலிருக்கும் பிள்ளைகளின் மனநிலை எப்படி இருக்கிறது? சற்றே உரசிப்பார்ப்போம்.

**யார் சீடத்துவ மகன் ?**

உதாரி மைந்தன் உவமையில் , 'அப்பா, சொத்தில் எனக்கு உரிய பங்கைத் தாரும் ' என்று கேட்க எந்த எதிர்ப்பும் தெரிவிக்காமல் சொத்தைப் பகிர்ந்து கொடுத்தார் தந்தை. வாழ்வையும் - சாவையும், நீரையும் - நெருப்பையும் நமக்கு முன்பாக வைத்து எது வேண்டுமோ எடுத்துக் கொள் என்று சொல்லும் தந்தைக் கடவுளின் உருவகமாகச் சித்தரிக்கப்பட்டவர் அவர் அல்லவா?

எல்லாவற்றையும் திரட்டிக் கொண்டு வெளிநாட்டிற்குப் போய் தாறுமாறான வாழ்க்கை வாழ்ந்து அனைத்தையும் செலவழித்தார் இளைய மகன். அனைத்தையும் பாழாக்கினார்.

ஒன்றுமில்லாத வெறுமை நிலையில் பசி வாட்டி வதைக்க பன்றிகளோடு பன்றியாக அதற்குரிய திவனத்தை உண்ண முற்பட்ட போது அதுவும் கூட கிடைக்காத நிலையில் அவர் மனம் கசிந்தது. பின்னோக்கி திரும்பிப் பார்த்தது. தன்னிலை அறிந்து தலை குனிந்தது. எப்படிப்பட்ட வாழ்வை இழந்து வந்து விட்டோம். எனது ஆணவத்தால், தீய நட்புகளால், பாவ பழக்க வழக்கத்தால் .... அவரின் இழப்பின் வலி அவரின் தவறுகளை உணர்த்திக் காட்டியது. தான் கடவுளின் அன்பை இழந்து போனதை உணர்ந்து கொண்டான். அவரின் அப்பாவின் அன்பு கலந்த அரவணைப்பும் சகோதர அன்பும்... இழப்பின் ஆழத்தைப் புரிய வைத்தது. உண்ண உண்ணக் குறைவுபடா உயர்ந்த உணவுகளும் பாதுகாப்பான தனது உறைவிடமும் அவரை ஏங்க வைத்தது.

மனமாற்றம் அவருக்குள் வந்தவுடனே தான் எதைப் பேசப்போகிறோம் என்பதை தயாரிக்கிறார். 'அப்பா, கடவுளுக்கும் உமக்கும் எதிராகப் பாவம் செய்தேன். நான் உம்மகன் என்று சொல்லிக் கொள்ள தகுதியற்றுப் போனேன். உமது வேலைக்காரர்களோடு வேலைக்காரனாக என்னை வைத்துக் கொள்ளும்' (லூக் 15:19) எத்துனை எளிய தாழ்ச்சி நிறைந்த ஒப்புரவு வார்த்தைகள், அவர் தந்தையிடம் வந்தபோது முழு டயலாக்கையும் சொல்வதற்கு முன்பே தந்தை அவரை மன்னித்து அவருக்கு தனது உரிமைகளில் பங்கினைத் தந்து மகிழ்ந்து கொண்டிருந்தார் என்பது தான் சிறப்பு.

சிலர் மன்னிப்பு கேட்கிறேன் பேர்வழி என்று பிரச்சனையை மேலும் இடியாப்பச் சிக்கலாக்கி விடுவார்கள். உதாரணமாக 'நா உன்ன முட்டாள், அறிவு கெட்டவன்னு சொன்னது தப்புதான். என்ன இருந்தாலும் உன்ன முட்டாள்னு சொல்லிருக்கவே கூடாது' என்று பல முறை சொல்லி மன்னிப்புக கேட்டால் யாரால்தான் மன்னிக்க முடியும்? பேசுமுன் 'உன் பேச்சை ஆயத்தம் செய்து கொள்' (சீஞா 33.4) என்கிறது ஞான நூல். அதேநூல் 'ஆண்டவருக்கு அஞ்சுங்கள்; அதுவே ஞானம். தீமையை விட்டு விலகுங்கள் அதுவே அறிவு' என்கிறது.

மனம் திருந்திய மகனாய் மனமாற்றம் பெற்று வந்த கணமே தந்தையின் உரிமைப்பிள்ளையாகிறார். ஆண்டவரின் இரக்கம் எத்துனை பெரிது! அவரிடம் மனம் திரும்புவோருக்கு அவர் அளிக்கும் மன்னிப்பு எத்துணை மேலானது என்பது அவரின் நிபந்தனையற்ற அன்பைப் பறை சாற்றுகிறது.

அதற்குப் பின் என்னவாயிருக்கலாம்? நமது கற்பனையில் ... அப்பாவின் அன்பையும் உரிமையையும் மட்டும் பெற்றால் போதுமா? வீட்டுக்குள் தனக்காக ஏற்பாடு செய்த விருந்தும் மகிழ்ச்சிக் கொண்டாட்டங்களும் நிறைந்து இருந்தாலும் அவன் கண்களும் மனதும் தனது சகோதர அன்பைத் தேடியிருக்கும். வீட்டுக்குள் வர விருப்பமல்லாமல் வெளியே அப்பாவோடு கோபமாக உரையாடிக் கொண்டிருந்த தன் அண்ணனை நாடி ஓடிப்போய் 'அண்ணா என்னை மன்னித்து விடு' என்று மருகி அழுதிருக்கும். உடன்பிறந்தவனின் அழுகையும், மனமாற்றமும், உருக்குலைந்த தோற்றமும் மூத்த சகோதரனின் மனநிலையை மாற்றி இருக்கலாம்.

தந்தையின் அன்பில் எப்போதுமே வாழ்ந்தவருக்கு (முதலில் முன்கோபம் வந்தாலும்) அவரின் பண்பு நலன்களும், கரிசனையும், அன்பும் இல்லாமல் போய்விடுமா என்ன? இரத்த உறவுகளின் விசித்திரமான அமைப்பு இதுதானே. காணாமல் கோபப்படும் பலரும் நேரே பார்த்துவிட்டால் பாசத்தில் மூழ்கிப்போவது சகஜம்தானே. இப்படியும் நடந்திருக்கலாம்.

மொத்தத்தில் மனம் வருந்தி, திருந்திய மனங்கள் இறைவனுக்கு உகந்தவையாகின்றன. அவை தங்கள் வாழ்வால் சிடத்துவ வழி மரபாய் மலருகின்றன.

அதே போல் இரு புதல்வர்கள் உவமையில் 'மகனே, நீ இன்று திராட்சை தோட்டத்திற்கு சென்று வேலை செய்' என்று சொல்ல 'நான் போக விரும்பவில்லை' என்று சொன்னாலும் தம் எண்ணத்தை மாற்றிக் கொண்டு போய் வேலை செய்கிறார். அடுத்த மகனிடம் அதே போல் சொல்ல ' நான் போகிறேன் ஐயா' (என்ன ஒரு பவ்யம்) என்று சொன்னாலும் போகவில்லை.

சீடத்துவ பிள்ளைகள் சாக்கு போக்கு சொல்லி பணி வாய்ப்பை தவற விடும் போது அவர்களின் இறை அனுபவங்களும், சீடத்துவத்திற்காய் அர்ப்பணித்த நிகழ்வும் , தம் வழியாய் பொது நன்மைகள் செய்ய கிடைத்த வாய்ப்புகளையும் ஒரு நிமிடம் நினைத்துப் பார்த்தால் போதும். வீட்டில் உட்கார முடியாது. என் தந்தையின் உரிமைப்பிள்ளை நான். அவர் இட்ட வேலைகளை செய்ய வேண்டிய கடமை எனக்கு உண்டு என்ற உத்வேகம் பிறக்கும். அது சும்மா இருக்க விடாது.

சிலர் வாய்ச் சொல்லில் வீரராக இருப்பார்கள். ஆனால் செயலில் ஒன்றும் இருக்காது. இவர்கள் பெயரளவில் பிள்ளைகள். (சீடர்கள்) 'மனிதர்களுக்கு உகந்தவர்களாகுமாறு வேலை செய்வதாகக் காட்டிக் கொள்பவர்களாயிராமல் கிறிஸ்துவின் பணியாளராய் கடவுளின் திருவுளத்தை உளமார நிறைவேற்றுங்கள். மனிதர்க்காக அன்றி கடவுளுக்காகவே செய்வது போல நன்மனத்தோடு வேலை செய்யுங்கள்'(எபே. 6. 6,7) என்று அழைப்பு விடுக்கிறார் தூய பவுலடியார்.

உடல் வீட்டில் ஓய்வாக சுகமாக இரு இரு என்று சொல்ல... தந்தையின் வார்த்தையும் அவரின் அன்பும் செய்ய வேண்டிய கடமையைச் சுட்டிக்காட்ட வேலைச் செய்ய புறப்பட்ட மூத்த மகன் சீடத்துவ உரிமைக்குரியவராகிறார்.

**நம் பணியாளர்கள் வீட்டில் ...**

பெரும்பாலும் நற்செய்திப் பணியாளர்களின் குடும்பத்தில் பிள்ளைகளும் பணியாளர்களாக இருக்கிறார்களா? என்றால் இல்லை. ஒரு சில குடும்பங்களில் மட்டுமே இருக்கிறார்கள். பல குடும்பங்களில் பிள்ளைகள் வெளிப்படையாக பணியில் ஈடுபடாவிட்டாலும் இறை நம்பிக்கையாளர்களாக, தாங்கள் இருக்குமிடத்தில், வேலை, தொழில் செய்யுமிடத்தில் முன்மாதிரிகையாக வாழ்ந்து மறைமுகப் பணியாளர்களாக கிறிஸ்துவைப் பிரதிபலிக்கிறார்கள். 'உன் மேல் இருக்கும் என் ஆவியும் உன் வாயில் நான் வைத்துள்ள என் வார்த்தைகளும் உன் வாயினின்றும் வழிவழி வரும் உன் தலைமுறையினர் வாயினின்றும் இன்றும் என்றென்றும் நீங்கி விடாது' (எசா 59. 21) என்ற வார்த்தையின் படி பின்னாட்களில் இக்குடும்பங்களை இறைவன் சீடத்துவத்துவக் குடும்பங்களாக மாற்றுவார் என்ற நம்பிக்கை நம்மில் உறுதி பெறட்டும். இளைய பணியாளர்கள் நல்ல தொண்டர்களாக எப்படி வாழலாம் என்பதை 1. திமொத்தேயு 4 :6-22) வரிவரியாக அறிவுரையாக, அறவுரையாக தெளிவு படுத்தியுள்ளார் தூய பவுலடியார்.

மற்றும் சில குடும்பங்களில் முன்மாதிரிகையான வாழ்க்கை, முரண்பட்ட பேச்சு, தேவையற்ற செயல்பாடுகளால் பிள்ளைகள் நற்செய்திப் பணியாளர்கள் என்றாலே எரிச்சலோடு வெறிக்கும் நிலை இருக்கிறது.

'பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகளுக்கு எரிச்சல் மூட்டாதீர்கள். அப்படி நடந்தால் அவர்கள் மனந்தளர்ந்து போவார்கள்' (கொலோ 3.21) என்று சீடத்துவப் பெற்றோருக்கு தூய ஆவியார் தூய பவுலடியார் வழியாக சொன்னதை நினைவில் நிறுத்துவோம்.

'புத்துயிர் ஜெபம் 6 மணிக்கு இருக்கிறது. சரியான நேரத்திற்குப் போக வேண்டும் வீட்டில் யாரும் நம்மை தடை செய்து விடக்கூடாது. மூஞ்சியைக் காட்டக் கூடாது' என்று

சமையலில் மருமகளுக்கு பிடித்த பாயசம் மகனுக்குப் பிடித்த மீன் குழம்பு, கணவர் விரும்பி சாப்பிடும் வறுவல் என்று மனதின் பதட்டம் வெளியே தெரியாமல் அனைத்தையும் முடித்து வைத்து விட்டுப் போய் புத்துயிர் செபம் வட்டாரக் கூட்டம் என்று கலந்து கொண்டு வரும் சிலர்.

சிலஇல்லங்களில் பெற்றோர் முன்மாதிரிகையாக வாழ்ந்தாலும் அப்பா பணியாளராக இருப்பதால் எனக்கு எந்த துன்பமும் , சோதனையும்வராது, வரக்கூடாது. எல்லாமே ஆசீர்வாதமாகவே இருக்க வேண்டும். அம்மா நற்செய்திப் பணியாளராக இருப்பதால் எல்லா நலன்களும் வளங்களும் வந்து சேரும் என்று நினைக்கும் இளையதலைமுறையின் தவறான கணிப்பு பல பணியாளர்கள் சந்திக்கும் அன்றாட நிகழ்வாகின்றது.

இந்நிலைக் கடந்தும் பெற்றோர் சீடத்துவத்தில் நிலைத்திருந்து இறை விழுமியங்களைப் பிரதிபலிப்பதும். சீடத்துவப்பிள்ளைகள் தங்கள் முன்மாதிரிகைகளால் கிறிஸ்தவ மதிப்பீடுகளை நம் வாழும் சமுதாயத்தில் வாழ்ந்து காண்பிப்பதும் இறைவனுக்கு ஏற்புடைய செயல்களாகும். இத்தகைய நல்ல சூழல் திரு அவையில் பரவிட சீடத்துவ வழிமரபினர் மென்மேலும் பெருகிட எல்லாம் வல்ல இறைவனை மன்றாடுவோம்.

நற்பணி **ஜெஸி. P.**

## ஜூலை 2024 வட்டார தியானக் கூட்டம்

| வ.எ | தேதி | வட்டாரம் | தொடர்பாளர் |
|---|---|---|---|
| 1. | 07 | புளியால்<br>9787491588 | நற்பணி M. மரியகிரகோரி<br>9486965799 |
| 2. | 07 | சருகணி<br>9943632636 | நற்பணி A. சகாயராஜா<br>9443509152 |
| 3. | 07 | தேவகோட்டை<br>9095866732 | நற்பணி J. ஆரோக்கியசாமி<br>8248899427 |
| 4. | 02 | சாயல்குடி<br>6383152402 | நற்பணி L. ஆரோக்கியசாமி<br>9150579311 |
| 5. | 14 | இராஜசிங்கமங்கலம்<br>9843752061 | நற்பணி L. ஜோசப் இருதயம்<br>9943165532 |
| 6. | 14 | ஆவுடைப்பொய்கை<br>8489703006 | நற்பணி A. சகாயராஜா<br>9443509152 |
| 7. | 14 | இடைக்காட்டூர்<br>9442857812 | Sr.ஜோஸ்பின் பச்சைஜோதி<br>7708282117 |
| 8. | 14 | மானாமதுரை<br>9944386477 | நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல்<br>9443503294 |
| 9. | 27 | தங்கச்சிமடம்<br>9585998444 | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>9489275861 |
| 10. | 27 | இராமேஸ்வரம்<br>9444712047 | நற்பணி G.M.S. ராணி<br>9655264448 |
| 11. | 27 | பாம்பன்<br>9790605049 | செயலர்<br>9787967272 |

| நாள் | மையம் | வழிநடத்துபவர்கள் |
|---|---|---|
| 07.07.23 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல்<br>நற்பணி S. மோட்ச அலங்காரம்<br>நற்பணி A. அடைக்கலம் |
| 07.07.24 | தந்தை ஜோசப் சேவியர் அரங்கம், காளையார்கோவில் | நற்பணி J. அருள் இளங்கோ<br>நற்பணி A. பிரான்சிஸ் சேவியர்<br>நற்பணி P. சகாயராணி |
| 13.07.24 | புனித குழந்தை தெரசாள் கோவில், தங்கச்சிமடம் | நற்பணி GMS. ராணி<br>நற்பணி X. லூர்துமேரி |
| 14.07.24 | புனித அருளானந்தர் திருத்தலம், ஓரியூர் | நற்பணி S. மோட்சஅலங்காரம்<br>நற்பணி A. சகாயதமிழ்செல்வி<br>நற்பணி இரா. அருள்பிரகாசம் |
| 14.07.24 | புனித செபமாலை அன்னை கோவில், இராமநாதபுரம் | நற்பணி G. ஜெனிபர்<br>நற்பணி பெ.தெரசா மிரண்டா<br>நற்பணி S. வில்லியம் |
| 14.07.24 | வியான்னிஅருள்பணிமையம் சிவகங்கை | நற்பணி பிரான்சிஸ் சேவியர்<br>நற்பணி M. சகாயமேரி<br>நற்பணி G. மிக்கேல் பிரபாகர் |
| 21.07.24 | புனித அன்னாள் கோவில் குருமிளாங்குடி | நற்பணி S. மோட்ச அலங்காரம்<br>நற்பணி S. சேசுராஜா<br>நற்பணி S. அந்தோனி பிரகாஷ் |
| 21.07.24 | அமலஅன்னை அமைதியகம் காயாவயல் | நற்பணி A. சகாயராஜா<br>நற்பணி S. பால்ராஜ் |
| 21.07.24 | புனித ஆரோக்கிய அன்னை கோவில், சாயல்குடி | நற்பணி M. அருள்மரியநாயகம்<br>நற்பணி T. ஸ்டீபன் |
| 28.07.24 | தூய ஆவியார் கோவில் இராசசிங்கமங்கலம் | நற்பணி S. மோட்ச அலங்காரம்<br>நற்பணி A. ஆரோக்கியமேரி<br>நற்பணி A. ஜான்சி மேரி |

**வித்தியாசமான எண்களும் அத்தியாவசியமான இறைவார்த்தைகளும்**

இதோ, ஒரு மறை பொருளை உங்களுக்குச் சொல்கிறேன்; நாம் யாவரும் சாகமாட்டோம்; ஆனால், அனைவரும் மாற்றுரு பெறுவோம்.

**1 கொரிந்தியர் 15:51**

| நாள் | நிகழ்வு | இடம் |
|---|---|---|
| 03 | அருளமுது ஆதாரக்குழு கூடுகை | அமைதியகம், காயாவயல். அருள்சான்று நிலையம், பரமக்குடி |
| 05 | முழு இரவு செபம் | மகிண்டி மிக்கேல்பட்டணம் |
| 06 | பரிந்துரை செபம் | திருஇருதய ஆண்டவர் திருத்தலம் இடைக்காட்டூர் |
| 07 | வட்டாரத் தியானக் கூட்டம் | புளியால், தேவகோட்டை, சருகணி, சாயல்குடி வட்டாரங்கள் |
| 07. | புதிய பணியாளர்கள் பயிற்சி I & II | அருள்சான்று நிலையம், பரமக்குடி காளையார்கோவில், |
| 13. | புதிய பணியாளர்கள் பயிற்சி I & II | தங்கச்சமடம் ஆவுடைப்பொய்கை, இடைக்காட்டூர், |
| 14. | வட்டாரத் தியானக் கூட்டம் | இராசசிங்கமங்கலம், மானாமதுரை |
| 14. | புதிய பணியாளர்கள் பயிற்சிI I & II | இராமநாதபுரம் வியான்னி அருள்பணிமையம், சிவகங்கை, ஓரியூர் |
| 19.20 & 21 | ஆண்டுத் தியானம் - I | அருள்சான்று நிலையம். பரமக்குடி |
| 21. | புதிய பணியாளர்கள் பயிற்சி I & II | குருமிளாங்குடி அமைதியகம். சாயல்குடி |
| 27. | வட்டாரத் தியானக் கூட்டம் | இராமேஸ்வரம், பாம்பன், தங்கச்சிமடம் |
| 28. | புதிய பணியாளர்கள் பயிற்சி I & II | இராஜசிங்க மங்கலம், கமுதி |
| 28. | தொடர் களப்பணி | அஞ்சுகோட்டை, இருதயபுரம். |

இப்ப இல்லாட்டி எப்ப ?
-எல்லாரோ

கோபத்தில் எதையும் தூக்கி எறிபவன் மனிதன்.
கோபத்தையே தூக்கி எறிபவன் புனிதன்.

**இதை நாம் உணர்வது இப்ப இல்லாட்டி எப்ப?**

மனிதரின் சினம் கடவுளுக்கு ஏற்புடைய செயல்கள் நிறைவேறத் தடையாயிருக்கிறது. யாக்கோபு 1:20

**நற்செய்திப் பணிக்குழுவின் இணைய தளம்** www.arulchandrunilayam.org

# விலை மதிப்பானதை விற்கிறோமா ?

தந்தையாகிய இறைவன் தமது ஒரே மகன் இயேசுவை உலகிற்கு அளிப்பதற்கான பேற்றினை இஸ்ராயேல் மக்களிடம் ஒப்படைத்தார். யாக்கோபின் வழித்தோன்றல்களின் வரும் பன்னிரண்டு குலத்தின் வழியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களை இறைவன் ஆயத்தம் செய்தார். இறைத்திட்டம் நிறைவேறுவதில் இஸ்ராயேல் மக்களுக்கு ஒரு பங்கு இருந்தது. அப்பங்கினைச் செய்து முடிக்க இறைவன் அவர்களிடம் விசுவாசத்தையும் நம்பிக்கையும் எதிர்பார்த்தார். ஆனால் மக்கள் கடவுளின் நம்பிக்கைக்கு எதிராகச் செயல்பட்டனர். அதனால் அவர்கள் அடிமைதனத்திறகு ஆளானார்கள்.

இஸ்ரயேல் மக்கள் 430 ஆண்டுகள் எகிப்தில் அடிமைகளாக வாழ்ந்தனர் (விப 12:40). இறைவன் ஆபிரகாமை அழைத்த போது அந்த இறைத் திட்டத்தை வெளிப்படுத்தினார். ''உன் வழியாக மண்ணுலகின் மக்களினங்கள் அனைத்தும் ஆசி பெறும்'' (தொநூ 12:3). ஆனால் இந்த ஆசீர்வாதங்களை உரிமையாகக் கொள்ள வேண்டிய இஸ்ரயேல் மக்கள் நான்கு தலைமுறைகளாக அடிமைகளாக வாழ்ந்தனர்.

இறை அழைப்பை அருங்கொடையாகப் பெற்ற யாக்கோபின் வழித்தோன்றல்கள் பன்னிருவரில் யோசேப்பு வழியாகவே தேர்ந்தெடுக்கப்பட்ட குலங்கள் அனைத்தும் எகிப்தை அடைந்தன. எகிப்தில் வாழ்ந்த போது அவர்கள் அனுபவித்த இனிமை வாய்ந்த மகிழ்ச்சியான வாழ்க்கையும் உரிமை வாழ்வும் காலம் செல்லச் செல்ல மாறத் தொடங்கி எகிப்து நட்டின் அடிமைத்ததனத்திற்கு எட்படுத்தப்பட்டனர்.

''யோசேப்பின் சகோதரர்கள் யோசேப்பை இருபது வெள்ளிக் காசுக்கு இஸ்யேலரிடம் விற்றனர். அவர்களும் யோசேப்பை எகிப்திற்குக் கொண்டு சென்றனர். (தொநூ 37:28) இதில்தான் இஸ்ராயேல் மக்களின் அடிமைத் தனத்தின் முதல் கண்ணி வெளிப்படுகிறது.

**விற்றது ஏன்?**

அறிவின்மையாலும், பொறாமையாலும் உருவான ஒரு கொடுஞ்செயல் வழியாக அவர்கள் யோசேப்பை விற்றபோது உண்மையில் அவர்கள் தங்களையே விற்று விட்டனர். பின்னர் கொடிய பஞ்சத்தின்போது யாக்கோபின் மக்கள் அவர்களின் தீயச் செயலுக்கான கைம்மாறு எனக் கூறுமாறு எகிப்தில் பிச்சை எடுப்பதற்காக சென்றனர். கொடும் பசியால் வாடி வதங்கிய அவர்கள் அங்கு சென்றனர். அவர்கள் மதிப்பு வாய்ந்த தங்கள் சகோதரன் யோசேப்பின் இரக்கத்தால் உண்பதற்குரிய தானியங்கள் மட்டுமின்றி அத்தொலை தேசத்தில் வாழ்வதற்கான அனுமதியும் பெறுகின்றனர். யோசேப்பிற்கு மதிப்பளித்தவர்கள் அவர்களையும் நேசித்து அங்கீகரித்தனர். பாரவோனின் அனுமதியுடன் யாக்கோபின் குடும்பம் அனைத்து உடைமைகளுடனும் கானானில் இருந்து எகிப்தை அடைந்து வாழத் தொடங்கினர். இருப்பினும் அவர்கள் உண்மையில் கடவுள் விரும்பிய விடுதலை வாழ்வை விற்றனர். அதனால் துன்பங்களுக்கு உள்ளானர். அவ்வாறே நாமும் பாவத்தால் விலைமதிப்பில்லாத விடுதலை வாழ்வின் மீட்பை சாத்தானுக்கு விற்று விடுகிறோம்.

நற்பணி V.**செபஸ்டியன் தார்சிஸ்,** செஞ்சை பங்கு.




கடந்த மாதத்தில் நமது வாழ்வின் இலக்குகள் என்ன என்பதை பற்றி பார்த்தோம். அது மூன்றாவது வழிமுறையாகும். உள் உந்துதளில் வளர நான்காவது வழிமுறையான "நமது இலக்குகளை காட்சி பலகையாக மாற்றுதல்" என்ற வழிமுறையை பற்றி பார்ப்போம்.

நமது எண்ணங்களை காட்சி படுத்துவது நமது ஆழ்மனதை தூண்டி, அதை செயலாக மாற்ற நமது மேல் மனதின் உதவியின்றி அதுவே செயல்படும் தன்மை உண்டு. இதன் அடிப்படையில் தான் நமது இந்திய பாரமபரியத்திலும் கிறிஸ்துவ பாரம்பரியத்திலும் இறைவனின் மகத்தான நிகழ்வுகளை சிற்பமாகவும், ஓவியமாகவும் காட்சிபடுத்தியுள்ளனர். காட்சி படுத்தி தியானிப்பதை ஒரு பயிற்சியாக நமது ஆன்மீக வாழ்வில் கொண்டிருந்தோம். இதை இரண்டாக பிரிக்காம். ஒன்று நாம் எதை அடைய விரும்புகிறோமோ அந்த இலக்கை அடைந்துவிட்டதாக நம்பி அந்த நிகழ்வை கண்முன் கொண்டுவந்து கற்பனையில் வாழ வேண்டும். இதை தினமும் தூங்குவதற்கு முன் தொடர்ந்து செய்து வந்தால் நமது ஆழ்மனம் இந்த பிரபஞ்சத்தோடு இணைந்து செயல்பட தொடங்கும். பின்னர் நமது இலக்கை அடைய இந்த பிரபஞ்சமே தொடர்ந்து உதவி செய்யும். இதை பல ஆய்வுகள் வழியாகவும், இதை பயிற்சி செய்து வெற்றிபெற்ற மனிதர்களின் அறிக்கையின் வழியாகவும் இதன் மகத்துவத்தை உளவியல் அறிஞர்கள் பல புத்தகங்களில் தெளிவு படுத்தியுள்ளனர்.

இரண்டாவது நமது இலக்குகளை காட்சி பலகையாக மாற்றுதல். நாம் கடந்த மாதத்தில் நீண்ட கால இலக்காக கருதும் ஒரு மூன்று இலக்குகளை ஓவியமாகவோ, வெட்டி எடுக்கப்பட்ட படமாகவோ அல்லது புகைபடமாகவோ எடுத்துக்கொள்ளுங்கள். பின்னர் குறுகிய கால இலக்காக நீங்கள் தேர்ந்தெடுத்த 101 எண்ணிக்கையில் 10 அல்லது 12 இலக்குகளை படமாக, அல்லது ஓவியமாக எழுத்துக்கொள்ளுங்கள். இப்போது ஒரு பலகையை அல்லது பெரிய அட்டையை எழுத்துக்கொண்டு அதில் மூன்று நீண்டகால இலக்கின் படங்களையும் 12 குறுகிய கால இலக்கின் படங்களையும் ஒட்டுங்கள்: இதுதான் உங்களின் ஒரு ஆண்டு காட்சி பலகை. இதை நீங்கள் உங்கள் பார்வையில் படும் இடத்தில் வையுங்கள். உங்கள் இலக்கு நிறைவேறியதும் அப்படத்தை நீக்கி விடுங்கள். உங்கள் இலக்கு நிறைவேறாத வரை எந்த படத்தையும் நீக்க வேண்டாம். ஒருவேளை ஒரு ஆண்டு முடிந்த பிறகும், நிறை வேறாத படங்களை நீக்காமல் நிறைவேறிய இலக்கை நீக்கிய படத்திற்கு பதிலாக புதிய இலக்குகளை உங்கள் பதிவேட்டில் இருந்து எடுத்து அதற்கான படங்களை தேர்வு செய்து அந்த இடத்தில் ஒட்டலாம். இப்படி தொடர்ந்து உங்களின் காட்சி பலகையை பயன்படுத்தி வந்தால் உங்கள் இலக்கை அடைய நீங்கள் அதிகம் கஷ்டபட வேண்டியதில்லை. உங்கள் ஆழ் மனதில் பதிவான காட்சி பலகையின் இலங்குகளை அடைய இந்த பிரபஞ்சம் உங்களுக்காக உழைக்கும். நீங்கள் விரும்புவது உங்களை நோக்கி நகர்ந்து கொண்டே இருக்கும். இந்த பயிற்சி முறையை தன் வாழ்வில் பின்பற்றிய நபர், இது தொடர்பான தன் அனுபவத்தை உளவியல் அறிஞர்களிடம் இவ்வாறு பகிர்ந்து கொண்டார்.

நான் எனது நண்பர்களின் ஆலோசனை படி எனது கனவுகளை நனவாக்கி காட்சிப் பலகை ஒன்றை தயார் செய்தேன். எனக்கு ஒரு வீடுவாங்க வேண்டும் என்ற இலக்கு இருந்தது. அதனால் ஒரு மாத இதழில் இருந்த ஒரு வீட்டின் படத்தை வெட்டி அந்த பலகையில் ஒட்டினேன். காலங்கள் கடந்து சென்றன. சில ஆண்டுகள் கழித்து ஒரு வீடு வாங்கனேன், அப்போது 5 ஆண்களுக்கு முன் கட்டிப் போட்ட எனது காட்சிப் பலகையை எடுத்து வெளியே வைத்தேன். அதில் உள்ள வீட்டு படத்தை சற்று உற்றுப் பார்த்தேன். என்ன ஆச்சர்யம் நான் வீடு விற்பனைக்கு என்ற விளம்பரத்தில் இருந்து வெட்டி ஒட்டிய அதே வீட்டைத்தான் நான் விலைக்கு வாங்கிருந்தேன். அப்போது தான் இந்த காட்சிப் பலகை உத்தியின் மேன்மையை உணர்ந்து கொண்டேன் என பெருமூச்சு விட்டு சொன்னார்.

ஆழ் மனதின் சக்தி அபாரமானது. நாம் உள் தூண்டுதல் பெற வேண்டுமென்றால், நாம் அடைய விரும்புவதை நமது உள் உணர்வுக்கும், ஆழ் மனதிற்கும் கடத்த வேண்டும். அப்போது நாம் உள் உந்துதல் பெற்றவர்களாக வளம் வருவோம்.

இந்த உத்தியை நேர்மறையான இலக்குகளுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். நாம் இரவு தூங்குவதற்கு முன் பகை உணர்வு, வெறுப்பு உணர்வு, கோபம், வருத்தம், பொறாமை, பயம் போன்ற எதிர்மறையான உணர்வுகளோடு இருக்கிறோமா என பரிசோதித்து பார்க்க வேண்டும். நமது கிறிஸ்துவ பாரம்பரியத்தில் நீண்ட காலமாக பின்பற்றி வரும் ஒரு ஆன்மீக பயிற்சி ஆன்ம பரிசோதனை ஆகும். இதை நாம் பயிற்சி செய்யும் போது நமது எதிர்மறை உணர்வுகள் நேர்மறையாக மாற்றும் பெற்று நமது ஆழ் மனதில் தனது தேவைகளை எடுத்துச் சொல்லி செயல்பட தூண்டும்.
உதாரணமாக ஒருவர் பொறமை என்ற உணர்வோடு தூங்க சென்றால் அந்த உணர்வு ஆழ்மனதிற்கு "தான் யார் மேல் பெறாமை படுகிறோனோ அவர் அழிய வேண்டும்" என்ற செய்தியை ஆழ்மனதிற்கு பதிவு செய்யும். இப்படி பட்ட பதிவை பெற்ற ஆழ் மனம் என்ன செய்யும் என்பதை நான் சொல்லி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை,

**அசை போட அரைநிமிடம் :**

"இன்றைய காட்சிப் பலகை. நாளைய சாட்சிப் பலகை".

சகோ. **S.ஜான் ஜோ பிரபாகர். SHJ.**
மனநல ஆற்றுபடுத்துநர், பரமக்குடி.



# ஒரு பணியாளரின் மன்றாட்டு



என்றுமுள்ள அரசராயிருக்கிற (தி பா 10:16)அரசர்க்கெல்லாம் அரசரே(1 தி மோ 6:15) இறைவா!
இந்த மண்ணுலகை யார் ஆண்டாலும் அவர்கள் ஆட்சி செலுத்துவதும் சட்டம் ஏற்றுவதும் நம்மால் தான் என்பதை புரிந்து நியாயம் வழங்குவதில் அக்கறை காட்டி விவேகமாய் நடந்து நீதி, அமைதி, மகிழ்ச்சி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு நடத்த வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகிறேன்.

# புனித மரிய கோரற்றி

மரிய கொரற்றி 1890. அக்டோபர் 16 அன்று இத்தாலி நாட்டில் ஏர்யாட்டிக் கடலுக்கு அருகிருக்கும் கொரினால்டோ என்னும் கிராமத்தில் பிறந்தார். இவரின் தந்தை லூயிற்ஜி உரோமையில் இராணுவ வீரராக ஐந்து ஆண்டுகள் பணியாற்றியவர். தாய் அசுந்தா அருள்சகோதரிகளின் பராமரிப்பில் வளர்ந்த ஆதரவற்றவள். பக்தியும், பண்பும் நிறைந்த இவர்களது குடும்பம் அந்த ஊரில் அனைவருக்கும் முன்மாதிரியான குடும்பமாகத் திகழ்ந்தது.



"அமல அன்னையின் தூய கன்னிமையில் இணைந்து தினமும் தூய வாழ்வு வாழ வேண்டும்" என்று பங்குத்தந்தை சொன்னதைப் பின்பற்றுவதற்காகத் தினமும் சிறப்பு செபமாலை செபித்தார். புதுநன்மை வாங்கிய பின் 5 வாரங்கள் ஆகவில்லை. அலெக்சாண்ட்ரோ ஸெரனெல்லா என்ற 18 வயது இளைஞன் தவறான வழியில் மரியாவை அடைய முனைந்தான். மரியா பாவத்திற்கிணங்க மறுத்துவிட்டார். ஆத்திரத்தில் அவன் மரியாவின் மாசற்ற மலர் போன்ற உடலை பலமுறை கத்தியால் குத்திக்கிழித்தான். "இது பாவம் இதற்காக நீ நரகத்திற்குப் போவாய்" என்று மரியா அவனை எச்சரித்தும் பயனில்லை. குற்றுயிராய் விடப்பட்ட அவர் மருத்துவமனையில் 24 மணி நேரம் கழித்து உயிர்நீத்தார்; "மன்னித்து விட்டேன் அலெக்சாண்ட்ரோவை" என்று சொல்லிவிட்டுத்தான் மடிந்தார். "மரிய கொரற்றி விண்ணினின்று மலர்களை என் கைநிறையக் கொடுத்ததாகக் கனவு கண்டேன்" என அறிவித்தான் அலெக்சாண்ட்ரோ. 27 ஆண்டுகளுக்குப் பின்னர் சிறையிலிருந்து வெளியே வந்து மரியாவின் தாயிடம் மன்னிப்புக் கேட்டான். கொலை பாதகனுக்கு 30 ஆண்டு சிறைத்தண்டனை அளிக்கப்பட்டது. பலகாலமாக மனந்திரும்ப மனமில்லாதிருந்த அவன் எதிர்பாராமல் பாவமன்னிப்பை மன்றாடினான். தம் இறுதி நாள்களில் கப்புசின் 3-ஆம் சபைத் துறவியாக வாழ்ந்து கி.பி.1970-ல் மரித்தார்.

50 ஆண்டுகளுக்குள் மரியாவுக்கு 12-ம் பத்திநாதர் புனிதர் பட்டம் கொடுத்தார். அப்போது அவருக்கு அருகில் மரியாவின் தாயும், 2 சகோதரிகளும், ஒரு சகோதரனும் உடனிருந்தனர். இலட்சகணக்கான மக்கள் புனிதர் பட்டம் கொடுப்பதைப் பார்க்க மண்டியிட்டு இருந்த கூட்டத்தில் அலெக்சாண்ட்ரோவும் பங்குபெற்று, மகிழ்ச்சி கண்ணீர் சிந்தினார்!

**சிந்திக்க :** கற்பே உன் விலை என்ன? என்று கேட்கும் சூழலில் நாமும் தூய ஆவியின் ஆலயமாக மரிய கொரற்றி போல நம்மையும், பிறரையும் மதித்து தூய்மையுடன் வாழ்வோம்.

நற்பணி **செங்கோல்மேரி,** காளையார்கோவில்

## என்னை மன்னியும்

- ஆண்டவர்மேல் உன் கவலையைப் போட்டுவிடு. அவர் உனக்கு ஆதரவளிப்பார். அவர் நேர்மையாளரை ஒருபோதும் வீழ்ச்சியுற விடமாட்டார் என்பதை மறந்து கவலைகளை சுமந்துகொண்டு ஆண்டவரின் பராமரிப்பை நம்பாமல் வாழ்ந்து வந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன் இறைவா! என்னை மன்னியும் (திபா 55:22).

- இறுமாப்பு ஒருவரைத் தாழ்த்தும் தாழ்மை உள்ளம் ஒருவரை உயர்த்தும் என்பதை மறந்து இறுமாப்புடன் யாரையும் மதிக்காமல் எல்லாம் எனக்குத் தெரியும் என்ற மேட்டிமை எண்ணத்தோடு வாழ்ந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன் இறைவா! என்னை மன்னியும் (நீமொ 29:23).

- ஆண்டவரையும் அவரது ஆற்றலையும் தேடுங்கள் அவரது திருமுகத்தை இடையறாது நாடுங்கள் என்பதை மறந்து ஆண்டவரைத் தேடாமல் உலக செல்வம், புகழ் நாட்டங்களைத் தேடி மனம் போன போக்கில் வாழ்ந்து வந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன் இறைவா! என்னை மன்னியும் (திபா 105).

## செப வீரர்களுக்கு

இம்மாத செபக் கருத்து

- நோயில் பூசுதல் அருள்அடையாளம், நோயுற்றிருப்போருக்கு நம்பிக்கையும், கடவுளின் பேரன்பையும் வழங்கும் அடையாளமாகிட
- தீராத நோயினாலும். முதுமை தொடர்பான நோய்களாலும் பாதிக்கப்பட்டு படுக்கையிலும். மருத்துவமனையிலும் இருப்போர் கரிசனைமிக்க கவனிப்பையும் ஆறுதலையும் பெற
- நற்செய்திப் பணியாளர்களின் ஆண்டுத் தியானங்கள் நம்பிக்கை எழுச்சியை உருவாக்க
- சிறப்பு யூபிலி ஆண்டிற்கான தயாரிப்பு திரு அவையின் வாழ்வில் புதுப்பித்தலுக்கு இட்டுச் செல்ல.
- இந்திய நாட்டில் மதச்சார்பின்மையும். சனநாயகமும் பாதுகாக்கப்படவும் சனநாயக அமைப்புகளும் நிறுவனங்களும் நீதியுடன் பணியாற்றவும்
- தமிழகத்தில் பெருகிவரும் குடிநோய் என்ற சமூகத்தீமை ஒழியவும். குடிநோயிற்கு அடிமையானவர்கள் சமூகத்தாலும். குடும்பத்தாலும் அன்புடன் அரவணைக்கப்பட

**விரும்பத்தக்க செயல்பாடு:**

- திருமண வாழ்வில் சவால்களைச் சந்திக்க இயலாமல் விவாகரத்து தேடும் இளம் தம்பதியர்களுக்காக உண்ணா நோண்புடன் செபித்தல்.



அருளமுது ஆதாரக்குழுக் கூடுகை- அமைதியகம்



அருளமுது ஆதாரக்குழுக் கூடுகை- அருள்சான்று நிலையம்

## விண்ணகப்பிறப்பு






மானாமதுரை வட்டாரம் பார்த்திபனூரைச் சார்ந்த
**நற்பணி T. அமல்தெரஸ்** அவர்கள் 04.06.2024 அன்று
விண்ணக பிறப்படைந்தார்கள்.

சிவகங்கை வட்டாரம் இடையமேலூரைச் சார்ந்த
**நற்பணி குழந்தைசாமி** அவர்கள் 13.06.2024 அன்று
விண்ணக பிறப்படைந்தார்கள்.

பாம்பன் வட்டாரம் பாம்பனைச் சார்ந்த
**நற்பணி போஸ்கோ மேரி** அவர்கள் 17.06.2024 அன்று
விண்ணக பிறப்படைந்தார்கள்.

தேவகோட்டை வட்டாரம் தேவகோட்டையைச் சார்ந்த
**நற்பணி S. பங்கிராஸ்** அவர்கள் 18.06.2024 அன்று
விண்ணக பிறப்படைந்தார்கள்.

இறைவா! நிலைவாழ்வை இவருக்கு வழங்கியருளும்.

### படங்களைத் தொண்டு இறைவார்த்தையை கண்டுபிடியுங்கள்?

படங்களைக் கொண்டு நினைவுக்கு வரும் இறைவார்த்தையை சட்டென்று சொல்லுங்கள் பார்ப்போம்.
துப்பு வேண்டுமா? **நீதிமொழிகள் 10-12 அதிகாரங்களுக்குள்**






**Narseithi Paniyalar** (தனிச்சுற்றுக்கு மட்டும்)
is published on behalf of the Commission for Proclamation, Diocese of Sivagangai from Arulchandru Nilayam (Faith Resource Development Centre), Brothers of the Sacred Heart, Ulaganathapuram, Vendhoni (B.P.O.) Paramakudi - 623 701, Ramnad Dist. Tel : 04564- 230453.
www.arulchandrunilayam.org |Email: arulchandrupmk@gmail.com